JESUS REDEEMS MINISTRIES

வாலிபர் உலகம்

மலர் 09 | இதழ் 12 | மார்ச் 2019
தனிப்பிரதி ₹10 | ஆண்டு சந்தா ₹100

பயப்படேன்

வாழ்நாள் முழுவதும் பயந்துகொண்டே இருந்தால், எதையும் சாதிக்க முடியாது.

உள்ளே...

06

14

20

26

32

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர் களுக்கென்றே மாதந் தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

SMS or WhatsApp

ஆசிரியர்:
மோகன் சி. லாசரஸ்

இணை ஆசிரியர்:
அவினாஷ்

ஆசிரியர் குழு:
ரெக்ஸ் கிளமென்ட்
பிரிசில்லா பால் | ஜிஷ்யா
ஜான் இராஜேந்திரன்
லீனா அவினாஷ்
ரெபேக்கா | ரேச்சல் | கிளாடிஸ்

வடிவமைப்பு: **வின்சென்ட்**

நிர்வாகம்: **பெனீட்டா**

சந்தா விபரம்

தனிப் பிரதி
₹10

ஆண்டு சந்தா
₹100

ஆயுள் சந்தா
₹1000

Mo / Cheque / DD :
"Jesus Redeems Youth Ministry"
என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும்.

வாலிபர் உலகம் பத்திரிகை சந்தா மற்றும் வாலிபர் ஊழியத்திற்கு நீங்கள் அனுப்பும் காணிக்கைகளை நாலுமாவடி முகவரிக்கு "வாலிபர் ஊழியம்" என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

எங்களது முகவரி:
இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211 Phone: 04639-220022.
Cell:9750955547 youth@jesusredeems.org
www.jesusredeems.com | www.youthworld.in

தலைவாசல்

அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!

ஒரு பிள்ளையைப் பெற்று அதை வளர்ப்பதற்குள் தாய்மார்கள் படாதபாடுபடுகிறேன் என்று சொல்லும்போது, 10 பிள்ளைகளைப் பெற்று அவர்களை ஒழுக்கத்துடன் வளர்த்து உலகமே போற்றும் வண்ணம் வழிநடத்தியது சிறப்பான தாய்மை அல்லவா!

சூசன்னா வெஸ்லி அவர்கள் தன்னுடைய 10 பிள்ளைகளையும் மிகவும் ஒழுக்கத்துடனும், நற்பண்புகளுடனும் வளர்த்து அவர்களைப் பெரிய ஆளாக்கி உள்ளார்கள். அவர்கள் பிள்ளைகளை தேவ பயத்தில் வளர்த்ததுடன் மட்டுமல்லாமல் மிக ஒழுக்கத்துடன் வளர்த்தது பலரால் பாராட்டப்பட்டுள்ளது. பிள்ளைகளை வளர்ப்பதில் சூசன்னாவின் அணுகுமுறை பலர் வியக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

சில பண்புகள்...

ஜெபம்

காலை எழுந்தவுடன் பரமண்டல ஜெபம், சங்கீதம் முழு அதிகாரம் மற்றும் தனிஜெபம் இத்தனையும் காலை உணவிற்கு முன்பு முடித்திருக்க வேண்டும். இரவு நேரம் புதிய ஏற்பாட்டில் ஒரு அதிகாரமும், சங்கீதமும் படிக்க வேண்டும்.

ஆராதனை

ஞாயிற்றுக்கிழமை ஆராதனை முக்கியம், குடும்ப ஜெபத்தில் கண்டிப்பாகக் கலந்துகொள்ள வேண்டும்.

படிப்பு

படிக்கும்போது முழு கவனம் இருக்க வேண்டும், தேவையில்லாமல் அறையைவிட்டு வெளியே போகக் கூடாது. விடுமுறை நாட்கள் இல்லாமல் மற்ற நாட்களில் வெளியே செல்ல அனுமதி இல்லை.

ஒழுங்கு

தூக்கம், படிப்பு, உணவு, இளைப்பாறுவது போன்று ஒவ்வொன்றிற்கும் வீட்டில் நேரம் ஒதுக்கி இருப்பார்கள்.

உணவு

மூன்றுவேளை உணவு தவிர, தேவையில்லாமல் நொறுக்கு தீனிக்கு ஒருபோதும் அனுமதி இல்லை. கொடுத்த உணவை குறைகூறாமல் சாப்பிடுவது மிக முக்கியம். இது வேண்டும், அது வேண்டும் என்று கூறும் பழக்கம் கூடாது.

பணிவு

வீட்டில் கனிவாக பேச வேண்டும், வேண்டியவற்றை பணிவாக கேட்கலாம், ஒருபொழுதும் அழுது ஆர்ப்பாட்டம் செய்து ஒன்றும் பெற்று விட முடியாது.

உண்மை

என்ன பெரிய தவறு செய்தாலும் உண்மையை ஒப்புக் கொண்டால் தண்டனை இருக்காது. எனவே உண்மையைப் பேசுவது அவர்களின் பழக்கமாகிவிட்டது.

இப்படி சிறப்பான முறைகளில் பிள்ளைகளை வளர்த்ததால் தான், இந்த உலகத்திற்கு ஜான் வெஸ்லி, தாமஸ் வெஸ்லி போன்ற பெரிய தேவ மனிதர்களை சூசன்னாவால் இந்த உலகத்திற்கு தர முடிந்தது.

ஒரு தேவ பயம் உள்ள தாயால் மாத்திரமே, பிள்ளைகளை தேவ பயம் உடையவர்களாய் இந்த உலகத் திற்கு வளர்த்து, இருண்ட இந்த உலகிற்கு இயேசு என்னும் வெளிச்சத்தை ஒளிரச் செய்ய முடியும்.

நீங்கள் தேவபயமுடையவர்களாய் இருந்தால், நிச்சயம் தேவபயமுள்ள சந்ததியை உருவாக்கலாம்!

இந்திய தேசத்திற்கு தேவபயமுள்ள தேவபிள்ளைகள் தேவை!

கிறிஸ்துவின் பணியில்

அவினாஷ்

ஆலோசனை
அவி

Heart Beat

நான் 10ஆம் வகுப்பு படிக்கிறேன். முதன்முறையாக அரசுத் தேர்வு எழுதப் போகிறேன் என்ற பயம் ஒரு பக்கம், நான் எதிர்பார்த்திருக்கிற மார்க் கிடைக்குமா, +1ல் நல்ல குரூப் கிடைக்குமா என்றெல் லாம் தோன்றுகிறது. ஒரு பக்கம் என் பெற்றோரின் கனவுக் கோட்டை, இன்னொரு பக்கம் ஆசிரியர்களின் எதிர்பார்ப்பு என்னை அழுத்துவ-துபோல உணருகிறேன். சுமாராக தான் படிப்பேன், ஆனால் தற்பொழுது ஏற்படும் பதட்டத்தால் சில நேரம் 2 பாடங்களில் மிகவும் குறைந்த மதிப்பெண் எடுக்கின்றேன். தேவையில்லாத காரியத்திற்கெல்லாம் பயப்படுகிறேன் என்று எல்லோரும் சொல்கிறார்கள். தேர்வு நெருங்க நெருங்க சரீரமும் இளைத்து போகின்றது. ஒன்றுமே புரியவில்லை. நான் தேர்வில் வெற்றிபெறுவேனா என்ற எண்ணமும் திடீரென எனக்கு வருகிறது. இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? - ரேணுகா, குடியாத்தம்

அன்புத் தங்கை ரேணுகா! உங்களின் தேர்வு பயமும், பலவிதமான பதட்டமும் நன்கு புரிகிறது. முதல்முறையாக அரசுப் பொதுத் தேர்வு எழுதும் அனுபவம் சற்று சவாலானது தான். ஒரு பக்கம் பெற்றோர்களின் மலைபோன்ற எதிர்பார்ப்பை நிறைவேற்றுவேனா என்ற அச்சம், மறுபக்கம் ஆசிரியர்களின் ஊக்கமூட்டும் உற்சாக வார்த்தைகள், அதிக மதிப்பெண் எடுத்தாக வேண்டும் என்ற அழுத்தம் ஒருபக்கம், இப்படி பல பக்கத்திலிருந்து உங்களை நோக்கி வரும் அத்தனை அம்புகளும் சிலநேரம் உங்களை சோர்ந்துப்போக பண்ணுவதை நன்கு உணர முடிகிறது.

ரேணுகா! அரசாங்கத் தேர்வில் Fear & Fedup எல்லாம் ரொம்ப சகஜம். நீங்கள் உங்கள் மனதை ரிலாக்ஸ் பண்ணுங்க. இவங்க இதை எதிர்பார்க்கிறார்கள், அவங்க அதை எதிர்பார்க்கிறார்கள் என்று எல்லாம் மனதைப் போட்டு குழப்ப வேண்டாம்.

முதலாவது, உங்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய முயலுங்கள். உங்களின் எதிர்பார்ப்பின்படி, நல்ல மதிப்பெண் எடுத்து தேர்ச்சி பெற்று +1ல் சேர வேண்டும். அதற்கு என்ன தேவையோ, அதன் மீது கவனம் செலுத்துங்கள். அப்படி உங்களுடைய முழு உழைப்பையும், கவனத்தையும், பெலத்தையும் படிப்பில் செலுத்தும் போது உங்களால் ரிலாக்சாக படிக்க முடியும். எந்த வியாதியும் வராமல் உங்களைக் காத்துக்கொள்ள முடியும். அநேகருடைய திறமைகள் வெளிப்படாமல் இருக்க அவர்களின் மனஅழுத்தமே காரணம். சின்ன ஒரு பிரச்சனை இருந்தாலும் அவர்களால் சீராக கவனம் செலுத்த முடியாது. இந்த சின்ன சின்ன கவலைதான் ஒரு பெரிய பயமாக மாறி, பிறகு அசைக்க முடியாத மலையைப் போன்று மனதில் நின்று விடுகிறது. உங்களுடைய கடிதத்தில் வார்த்தைக்கு வார்த்தை பயம் என்று சொல்லிக்கொண்டே இருக்கின்றீர்கள்.

பயம், தொடர்ந்து போராட அல்லது முயற்சி செய்ய உங்களை ஊக்குவிக்காது.



பயம் வருவதற்கான காரணம்

- பழைய தோல்வியாக இருக்கலாம்.
- உங்களின் பெலவீனமாக இருக்கலாம். அதாவது குறிப்பிட்ட பாடத்தைப் படித்து புரிந்துகொள்ள உங்களுக்கு இயலா மல் இருக்கலாம்.
- அந்தப் பாடத்தில் அதிக ஆர்வம் இல் லாமல் இருக்கலாம்.

இப்படி பல காரணங்கள் உண்டு. அவைகளை நீங்கள் சற்று சரிசெய்து கொண்டால் இந்த பயத்தை மேற்கொள்ளலாம்.

பயத்தை ஏன் மேற்கொள்ள வேண்டும்

- பயம், தொடர்ந்து போராட அல்லது முயற்சி செய்ய உங்களை ஊக்குவிக் காது.
- பயம் தேவையில்லாத, அர்த்தமற்ற பொய்யான எண்ணங்களை (நீ வெற்றி பெறமாட்டாய், நீ தேர்வு நேரத்தில் வியாதி ஆகிடுவாய்) என உங்கள் மனதுக்குள் செலுத்தும்.
- உன்னால் தனிமையாகப் போராட முடி யாது, நீ பலமுறை தோற்றவர் என்று (பயம்) முந்தைய தோல்வியை முன்னி லைப்படுத்தும்.

பயத்தை மேற்கொள்ள வழிகள்

- முதலில் நம்பிக்கை தரக் கூடிய வார்த்தைகளைப் பேசுங்கள்.
- நம்பிக்கை தரக்கூடிய வாசகங்களை வாசியுங்கள்.
- நம்பிக்கைத் தரக்கூடிய படக்காட்சிகளைப் பாருங் கள்.
- நம்பிக்கைத் தரக்கூடிய நபர்களோடு பேசுங்கள் (மிகவும் முக்கியமானது).

எனவே, ரேணுகா உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள வேதம் சொல்கிறது: **கர்த்தாவே, பலமுள் ளவனுக்காககிலும், பலனற்றவனுக்காகிலும் உதவி செய்கிறது உமக்கு லேசான காரியம்** (2 நாளா.14:11).

இதுவரை நீங்கள் தனியாகப் போராடி படித்தீர்கள், சில பயம் வந்திருக்கலாம். இனி உங்களுக்கு உதவி செய்ய இயேசு உண்டு. உங்கள் பக்கம் நின்று உங்கள் பயத்தைப் போக்க அவரால் மாத்திரமே முடியும். இயேசு உங்களோடு இருந்து உங்கள் பயத்தை நீக்கி புதுநம்பிக்கை தந்து வெற்றி தந்து உயர்த்துவார்! "பயப்பட வேண்டாம்! வெற்றி நிச்சயம்!!" ●

மாணவர்களுக்கான டிப்ஸ்

தேர்வு நேரத்தில்...

காலை உணவு: கண்டிப்பாக காலை உணவினை தடை செய்யக் கூடாது. காய்கறிகள், கீரைகள், பழங்கள் அதிகமாக எடுத்துக் கொள்ளுங்கள்.

தூக்கம்: சரியான நேரத்தில் தூங்கி எழுந்திருப்பது உடல் ஆரோக்கியமாக இருக்க உதவும்.

சுகாதாரம்: பசி மயக்கத்தால் வெளியே விற்கும் சுகாதாரமற்ற உணவுப் பொருட்களை வாங்கி உண்ணாதீர்கள். ஒரு பாட்டில் தண்ணீர் எப்போதும் கையில் வைத்துக் கொள்ளுங்கள்.

நீர் ஆகாரம் : தண்ணீர் அதிகமாக குடியுங்கள். தர்பூசணி, வெள்ளரிக்காய், சுரைக்காய் போன்றவற்றை உணவில் அதிகம் எடுத்துக் கொள்ளுங்கள். இளநீர், நீர்மோர், பதநீர், பழச்சாறு, நொங்கு போன்ற குளிர்பானங்களை அருந்துவது உடல் நலத்திற்கு நல்லது.

இன்றும் உயிருள்ள சாட்சி...

ஹாய்... என் பெயர் தீபிக்கா லாமேக். என் வாழ்க்கையில் நடந்த அந்த மறக்க முடியாத சம்பவத்தைப் பற்றி உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

1992ஆம் ஆண்டு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்து, சிறு வயதிலிருந்தே பல ஆவிக்குரிய காரியங்களை சொல்லிக்கொடுத்து வளர்த்தார்கள் என் பெற்றோர். 13 வயதில் இயேசுவை என் வாழ்க்கையின் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டேன். அதற்குப் பிறகு என் வாழ்க்கை மாறத் துவங்கிற்று. டீன் ஏஜில் என் புருவத்தில் முடி பயங்கரமாக கொட்டத் துவங்கியது. மருத்துவர்கள் பல Steroid ஊசிகள் போட வேண்டும், அப்போதுதான் முடி வளரும் என்று சொன்னார்கள். நாங்கள் ஜெபித்துவிட்டு வேறு மருத்துவரை சந்தித்தோம். மிகக்குறைந்த மருந்துகளையே எனக்கு கொடுத்தார்கள். தேவன் எங்கள் ஜெபத்தைக் கேட்டு, மறுபடியும் அடர்த்தியான முடியைக் கொடுத்தார்; முடி கொட்டுவதும் நின்றது. டீன் ஏஜில் தேவன் என்னுடைய ஜெபத்தை கேட்டது அவர் மீதுள்ள நம்பிக்கையை அதிகரித்தது. இப்படி என் வாழ்க்கையில் பல அற்புதங்களை செய்தார்.

என்னுடைய 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொது தேர்வுகளுக்கு முன்புகூட நான் பெலவீனப்பட்டிருந்தேன். இழுப்புடன் (Wheezing) ஒரு முறையும், வலது கையின் விரலில் தாங்க முடியாத வலியோடு ஒருமுறையும் தேர்வுக்கு சென்றிருக்கிறேன். இப்படிப்பட்ட நேரங்களில் எல்லாம் தேவனுடைய பெலத்தினால், கிருபையினால் நல்ல மதிப்பெண் பெற தேவன் உதவினார். பெரிய எதிர்பார்ப்புகளோடும், கனவோடும் பொறியியல் கல்லூரியில் சேர்ந்தேன். நான் நன்றாக பியானோ வாசிப்பேன். கல்லூரி வாழ்க்கை சந்தோஷமாக சென்று கொண்டிருந்தது.

2010ஆம் ஆண்டு ஒருநாள் நான் படிக்கட்டு ஏறும்போது பயங்கரமாக மூச்சு வாங்கியது. ஜுன் மாதத்தில் ஆரம்பித்த இந்த பிரச்சனை டிசம்பர் மாதம் வரை சென்றது. நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டேபோனது. என்னுடைய செயல்பாடுகளிலும் தொய்வு ஏற்படத் துவங்கியதை கவனித்த என்னுடைய பெற்றோர், பொது மருத்துவரிடம் அழைத்துச் சென்றனர். மருத்துவ பரிசோதனைகள் எக்ஸ்ரேக்கள் எங்களை திடுக்கிட செய்தது.

ஆம்! என்னுடைய இருதயம் வீங்கி இருப்பதாக பரிசோதனை முடிவுகள் கூறின. இருதய நிபுணரிடம் சென்றோம். பல பரிசோதனைகளை செய்த பின் அந்த அதிர்ச்சியான தகவலை சொன்னார்கள். அபாயகரமான அரிய வியாதியான 'Primary Pulmonary Hypertension' (அதாவது நுரையீ-

ரலுக்கு செல்லும் இரத்தத்தின் அழுத்தம் அதிகரிப்பது) இது மிகவும் ஆபத்தான வியாதியாகும். "வாழ் நாள் முழுவதும் மருந்து மாத்திரைகள் எடுக்க வேண்டுமென்றும் 3 மாதம் முதல் 2 ஆண்டு வரையே நான் உயிரோடு இருப்பேன்" என்றும் என் பெற்றோர்களிடம் மருத்துவர்கள் சொல்லிவிட்டார்கள். என் குடும்பமே அதிர்ச்சியில் உறைந்து போனது.

ஒவ்வொரு நாளும் வலியும், வேதனையும் அதிகரித்துக் கொண்டே இருந்தது. இதற்கான ஒரே தீர்வு இருதயம் மற்றும் நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சையே என்றனர் மருத்துவர்கள். இப்படியே ஒவ்வொரு நாளும் நகர்ந்தது. 2011ஆம் ஆண்டு நவம்பர் 11ஆம் தேதி, அதிகாலை 3:45க்கு நான் சுயநினைவு இல்லாமல் வீட்டு பாத்ரூமில் மயங்கி விழுந்தேன். உடனே மருத்துவமனைக்கு அழைத்து சென்று சில பரிசோதனைகள் செய்தனர். மருந்து மாத்திரைகளை அதிகரித்தனர் மருத்துவர்கள். மிகவும் கஷ்டப்பட்டேன். என்னுடைய கல்லூரி நண்பர்கள் மற்றும் ஆசிரியர்களின் உதவியை என்னால் ஒரு போதும் மறக்க முடியாது. நான் பொறியியல் படிப்பை படித்து முடிக்க எனக்கு பெரிதும் உதவினார்கள்.

இப்படி பல கேள்விகளோடும், வலியோடும் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்தபோது, ஹைதராபாத்தில் ஒரு மருத்துவரைப் பற்றி கேள்விப்பட்டு அவரை சந்தித்தோம். அவர் நம்பிக்கை தரக்கூடிய சில சிகிச்சைகளை பற்றி சொன்னார். இருதய சிகிச்சைக்கு என் பெயரையும் பதிவு செய்திருந்தார். இந்த சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தால் நம் சரீரம் பெலனடையும், நம்மால் வலியில்லாமல் வாழ முடியும் என்ற கனவு கோட்டையில் விடிவு காலத்தை எதிர் நோக்கி வாழ்ந்த எனக்கு ஏமாற்றமே காத்திருந்தது. நம் இந்திய அரசாங்கம் இந்த புதிய சிகிச்சைக்கு அனுமதி கொடுக்காதது தான் அந்த ஏமாற்றத்திற்கு காரணம். ஏன், இப்படி நடக்கிறது என்று ஆண்டவரிடம் கேள்வி கேட்டேன். அவர் அப்போது எனக்கு பதில் தரவில்லை.

இப்படியே என் வாழ்க்கை சென்று கொண்டிருந்தது. 2013ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் என்னுடைய கைகள், கால்கள் மற்றும் வயிறு வீங்கத் துவங்கியது. நுரையீரலில் உள்ள அழுத்தம் அதிகரித்தது. மருந்துகளை அதிகரித்தனர். கடுமையான கத்திரி வெயிலிலும் ஒரு நாளைக்கு ஒரு லிட்டர் தண்ணீர் தான் குடிக்க வேண்டும் என்ற சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டேன். பசியே இல்லை. அடிக்கடி மயங்கி விழுவேன். இதனால் 24 மணி நேரமும் என் அம்மா என் கூடவே இருக்க வேண்டிய சூழ்நிலை உருவானது.

3 மாதம் முதல்
2 ஆண்டு வரையே
நான் உயிரோடு
இருப்பேன் என்று
மருத்துவர்கள்
கூறினார்கள்.

2013ஆம் ஆண்டு மே மாதம் என்னுடைய பொறியியல் படிப்பை முதல் வகுப்பில் தேர்ச்சி பெற தேவன் உதவினார். ஆனால் இந்த சந்தோஷம் ரொம்ப நாட்கள் நிலைக்கவில்லை. அதே ஆண்டு அக்டோபர் மாதம் கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டேன். துவக்கத்தில் Viral fever என்று நினைத்தோம். பிறகுதான்

Leptospirosis (எலி காய்ச்சல் என்றும் சொல்வார்கள்) என்று தெரிந்தது. வீட்டிலேயே எனக்கு IV ஊசி போடப்பட்டது. 2 நாட்களில் என் சரீரம் மிகவும் பெலவீனமானதால், உடனே 'அவசர சிகிச்சை பிரிவில்' ஒரு வாரம் அனுமதிக்கப்பட்டேன்.

டிசம்பர் மாதம் என்னுடைய நகம் மற்றும் உதடு நீல நிறமானது. மாத்திரை மற்றும் ஊசிகளின் Side effects என் சரீரத்தில் பல தாக்கத்தை ஏற்படுத்தியது. அமெரிக்காவில் ஒரு மருத்துவமனையில் இதற்கான சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதை கேள்விப்பட்டோம். என் பெற்றோர் அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டனர். ஆனால் நான் விமானத்தில் செல்ல தடை விதிக்கப்பட்டதால், அமெரிக்காவிற்கு சென்று சிகிச்சை பெறுவதும் கைவிடப்பட்டது. நானும் என் பெற்றோரும் என் சுகத்திற்காக ஜெபித்து வந்தோம்.

2014ஆம் ஆண்டு, ஒரு ஊழிய குழுவோடு இணைந்து ஆராதனை நடத்தி தேவனுடைய நாமத்தை மகிமைபடுத்தினேன். சில நாட்களில் அதுவும் தடையானது. என்னால் தொடர்ந்து இரண்டு வரிகள் பேச முடியாது. நாளுக்கு நாள் சரீரம் பெலவீனமடைந்ததால் வீட்டிலேயே முழுமையாக நேரம் செலவளித்தேன். இதற்குமேல் சிகிச்சையும் இல்லை என்ற நிலைக்கு வந்துவிட்டேன். இதற்கு அதிகமான Dosage இல்லை, என் சரீரம் நாளுக்கு நாள் பெலவீனமடைந்தது.

2015ஆம் ஆண்டு என்னால் ஒன்றுமே செய்ய முடியாத நிலைக்கு வந்துவிட்டேன். இருதயம் மற்றும் நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சையே இதற்கான தீர்வு என்று முடிவெடுத்து மருத்துவர் குழுவை சந்தித்து, பரிசோதனைகள் மேற்கொண்டோம். சில பரிசோதனைகள் ரொம்ப கஷ்டமாக இருந்தது. குறிப்பாக மூக்கின் வழியாக குழாய்களை விட்டு பரிசோதித்தனர். இதெல்லாம் பயமாகவும், கஷ்டமாகவும் இருந்தது.

ஒவ்வொரு தீர்மானத்தையும் ஜெபித்து விட்டு தான் எடுப்பேன். இந்த அறுவை சிகிச்சையின் வழியே நான் செல்ல வேண்டுமா? வேண்டாமா? இது மிகவும் வலியும் வேதனையும் நிறைந்த பாதையாய் இருக்கிறதே! என்று தேவனிடம் ஜெபித்தேன். ஊசி மற்றும் குழாய்களைப் பார்த்தாலே எனக்கு பயம். எனவே தேவன் சுகம் தருவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஒவ்வொரு நாளும் தேவனே என்னோடு பேசும், நான் எப்படிப்பட்ட முடிவை எடுக்க வேண்டும் என்று அவரிடம் கேட்டேன். தேவன் உடனே பதிலளிக்கவில்லை. அமைதியாக இருந்தார். அவர் பேசும் வரை நான் எந்த முடிவும் எடுக்கவில்லை.

தேவனோடு அதிக நேரம் செலவிட்டேன். ஒரு இரவு "நான் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பிரிவிற்குள் செல்வதைப் போன்ற சொப்பனத்தைப் பார்த்தேன். மிகவும் பயந்து போனேன். மறுபடியும் இதேபோல் வேறொரு சொப்பனத்தை தேவன் எனக்குக் காண்பித்தார்.

> **ICUவில் அறுவை சிகிச்சைக்குப் பின் நான் கண்விழித்துப் பார்த்தபோது, என் சரீரம் முழுவதும் Tube போடப்பட்டிருந்தது.**

மரண பயமும் அறுவை சிகிச்சையைப் பற்றிய பயமும் இருந்த போதிலும் என் பெற்றோரின் ஜெபமும் உற்சாகப் படுத்தக் கூடிய வார்த்தைகளும் என்னை பெலப்படுத்தியது. நாளுக்கு நாள் என் சரீரம் பெலவீனமானது, என்னால் எழுந்து நடக்க முடியவில்லை; மூச்சு விடுவது கூட சிரமமானது. சில சம்பவங்களின் மூலமாக நான் இந்த பாதையின் வழியே செல்லவேண்டும் என்று தேவன் எனக்கு வெளிப்படுத்தினார். அறுவை சிகிச்சைக்காக ஆயத்தமானோம்.

இருதயம் மற்றும் நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு யோசிக்கக்கூட முடியாத அளவில் அதிக பணம் செலுத்த வேண்டும். பலரின் மூலமாக தேவன் எங்கள் மருத்துவ தேவைகளை அதிசயமாக சந்தித்தார்.

ஆனால் எனக்கு ஏற்ற Donor கிடைக்கவில்லை. இந்த அறுவை சிகிச்சை அவ்வளவு சுலபமானது அல்ல, எனினும் எங்கள் ஜெபங்கள் வீண்போகவில்லை.

2016ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் போராட்டத்திற்கு பிறகு, என் சரீரத்திற்கு ஏற்ற Donor எங்களுக்கு கிடைத்தார். 15 மணிநேர அறுவை சிகிச்சை அது. ICUவில் அறுவை சிகிச்சைக்குப் பின் நான் கண்விழித்துப் பார்த்த போது, என் சரீரம் முழுவதும் Tube போடப்பட்டிருந்தது. வேறொரு நுரையீரல் மற்றும் இருதயம் பொருத்தப்பட்டிருந்தது. தேவன் அற்புதவிதமாக இந்த பாதையின் வழியே என்னை நடத்தினார். குறுகிய நாட்களில் என்னை சுகப்படுத்தினார். 9வது நாளிலேயே மருத்துவர்கள் என்னை வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள்.

பரிசுத்த ஆவியானவர் அவருடைய அபிஷேகத்தினால் என்னை நிரப்பினார். தேவனுடைய பிரசன்னத்தை ஒவ்வொரு நாளும் என்னால் உணர முடிந்தது. இன்று நான் தேவனை ஆராதிக்கிறேன்; எவையெல்லாம் என்னால் செய்ய முடியாது என்று மருத்துவர்கள் சொன்னார்களோ, அவற்றை எல்லாம் செய்கிறேன். சராசரி நபரைபோல் என்னால் செயல்பட முடிகிறது. நான் MBA படித்துவிட்டு வேலையும் செய்கிறேன்; ஊழியமும் செய்கிறேன்; எனக்கு மறுவாழ்வு கொடுத்த தேவன்! என்னுடைய அழுகையை ஆனந்தமாக மாற்றிய தேவன் நிச்சயமாக உங்கள் வாழ்க்கையையும் மாற்றுவார். ●

இப்படிக்கு
தீபிகா

இயேசுவின் நண்பன் ஜெபக்குழு

ஆவியானவரோடு இணைந்து ஜெபிக்க பழகிக் கொள்ளுங்கள். நம்முடைய ஜெபத்தில் நமக்கு உதவி செய்கிற நல்ல நண்பர் பரிசுத்த ஆவியானவர்! இன்று முதல் கர்த்தரோடு உறவாட ஆரம்பியுங்கள்! நாளை அல்ல... இன்றே அது உங்கள் அனுபவமாக மாறட்டும்.

தமிழ்நாட்டில் உள்ள 198 இயேசுவின் நண்பன் ஜெபக்குழுக்களில் சுமார் 1830 வாலிபர்கள் நம் தேசத்தின் இரட்சிப்பிற்காகவும், எழுப்புதலுக்காகவும் ஜெபித்து வருகிறார்கள். ஜெபக்குழுவாக இணைந்து ஜெபிப்பதால் இரண்டு காரியம் நடைபெறுகிறது. ஒன்று ஜெபிக்கும் வாலிபனின் வாழ்க்கை மாறுகிறது. இரண்டாவதாக அவன் ஜெபிக்கும் போது அவனை சுற்றியுள்ள சபையிலும், சமுதாயத்திலும் மாற்றம் ஏற்படுகிறது. நீங்கள் பாவத்தை மேற்கொள்ள, ஒரு ஜெபக்குழுவோடு உங்களை இணைத்துக் கொள்ளுங்கள். ஜெபமும், ஐக்கியமும் கிறிஸ்துவுக்குள்ளாக உங்களை நிலைநிறுத்தும்.

2010ஆம் ஆண்டு எங்கள் கிராமத்திற்காக ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 6:30 மணி முதல் 8:30 மணி வரை சில வாலிபர்களாக இணைந்து ஜெபிக்க ஆரம்பித்தோம். எங்களை உற்சாகப்படுத்தி சில அண்ணன்மார்களும் எங்களுடன் இணைந்து ஜெபிக்க ஆரம்பித்தனர். நாங்கள் ஜெபிக்க ஜெபிக்க எங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் மாற்றம் வர ஆரம்பித்தது. எங்களுடைய படிப்பில், வேலையில் உயர்வைத் தந்தார்.

ஜெபக்குழு மட்டுமல்லாமல், எங்கள் கிராமத்தில் ஊழியம் செய்ய ஆரம்பித்ததும் எங்கள் ஜெபத்தைக் கேட்டு கிராமத்தில் பல மாற்றங்கள் வர ஆரம்பித்தன.

தற்பொழுது ஆம்பூரில் நடைபெறும் சினெர்ஜியாவை நடத்த தேவன் கிருபை செய்து வருகிறார். ஜெபக்குழுவில் நாங்கள் 14 பேர் இணைந்து ஜெபித்து வருகிறோம்.

குழுத் தலைவர் : ஜெய் பிரகாஷ்

ஒரு மணி நேரம் குழுவாக எப்படி ஜெபிக்கலாம்

15 நிமிடம் : பாடல், துதி ஆராதனை

15 நிமிடம் : வேதபகுதியை தியானித்தல்

25 நிமிடம் : வாலிபர்களுக்காக, சபைகளுக்காக, தேசத்திற்காக

5 நிமிடம் : குழுவிலுள்ளவர்களின் படிப்பிற்காக / வேலைக்காக / தேவைகளுக்கான ஜெபம்

உங்கள் பகுதியில் இத்தகைய ஜெபக்குழு அமைக்க விரும்பினால் எங்களை அணுகவும் 7598155502

பயம்

வீட்டில் நீங்கள் மட்டும் தனியாக இருக்கிறீர்கள்:அது ஒரு இரவு நேரம்; Sofaவில் அமர்ந்து உங்களுக்குப் பிடித்த டி.வி.நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்; திடீரென சற்றும் எதிர்பாராத நேரத்தில் உங்கள் பால்கனி கதவு ‘டமால்’ என்ற சத்தத்தோடு திறக்கிறது; அடுத்த விநாடியே உங்கள் இதயதுடிப்பு அதிகரிக்கிறது; வேகமாக மூச்சுவிடுகிறீர்கள்; உங்களையும் அறியாமல் கால், கையெல்லாம் இறுக்கமாகிறது.

உணர்வுகள் பகுதி 3

உணர்ச்சிகளைக் கையாளுவது எப்படி?

யாரோ வீட்டிற்குள் நுழைந்து விட்டார்களோ? தனியாக இருக்கிறேனே! எப்படி சமாளிப்பது? போன்ற ஆயிரக்கணக் கான எண்ணங்கள் மனதில் ஓடத்துவங்கிவிடும். டமா லென்று திறந்து மூடும் கதவின் சத்தத்தைக் கேட்டவுடன், ஒரு விநாடிக்கும் குறைவான நேரத்திற்குள்ளேயே நீங்கள் ஏதோ ஆபத்தில் இருக்கிறீர்கள் என்ற ‘பயம்’ உங்களை சூழ்ந்துகொள்ளும்.

இதை வாசித்துக் கொண்டிருக்கும் அனைவரும் இந்த உணர்வை அனுபவித்திருப்பீர்கள்...! கதவைத் திறந்து யார் என்று பார்க்க பயம் கலந்த நடுக்கத்துடன் தட்டுத்தடுமாறி வாசலின் அருகே செல்லும்போது தான் தெரியும், வேக மாக வீசிய காற்றின் வேலை தான் இது; நாம் பயந்தபடி ஒன்றும் இல்லை என்று நிம்மதிப் பெருமூச்சு விடுவோம்...! சரி, ஆபத்தே இல்லை; நான் பயந்தபடி எதுவும் நடக்க வில்லை; எனினும் அந்த ஒரு நிமிடத் திற்குள் உலகமே இருளானதைப் போல் மாறிடுச்சே! என்று தானே யோசிக்கிறீர்கள்!.. ம்ம்... இந்த மாதம் இந்த உணர்வைப் பற்றித்தான் பார்க்கப் போகிறோம்.

‘பயம்’ ஆரோக்கியமானது. ‘பயம்’ இல்லாமல் நீங்கள் வாழமுடியாது. ‘பயப்படாதே’ என்றால் பயம் இல்லாமல் வாழு என்பதல்ல அதன் அர்த்தம்.

தெரிந்து கொள்ளுங்கள்

- ‘பயம்’ என்பது வல்லமையான மற்றும் இயல்பான உணர்வு. வரவிருக்கும் ஆபத்திலிருந்து நம்மை காப்பாற்றிக் கொள்ள அல்லது பாதுகாத்துக் கொள்ள இது உதவுகிறது.
- நம் உயிருக்கு ஆபத்தான அல்லது அச்சுறுத்தக்கூடிய செயல் நடக்கப் போகிறது என்று உணர்ந்தால், நாம் பார்க்கும் அல்லது கேட்கும் காரியத்திலிருந்து மூளையில் உள்ள Thalamus பகுதி செயல்பட்டு, அழுத்தத்தின் விளைவால் சில அமிலத்தை வெறியேற்றுகிறது. இதன் விளைவால் தகவல்களை சுமந்து செல்லும் நரம்பணுக் கள், வேகமாக அந்தத் தகவலை மூளையில் உள்ள Amygdala, Hypothalamus பகுதிக ளுக்கு அனுப்புகிறது. இச்செயல்பாட்டின் விளைவால் ‘போராடணுமா, ஓடணுமா?’ (fight/flight) எப்படி இந்த சூழ்நிலையில் செயல்பட வேண்டும் என்பதை மூளைப் பகுதியில் உள்ள Hy-pothalamus தீர்மானித்து செயல் படுகிறது. இவை அனைத்தும் ஒரு மில்லி வினாடிக்குள் நடக்கிறது. இதனால் தான் ‘பயம்’ என்னும் உணர்வை நீங்கள்

உணருவதற்கு முன்பே இருதயம் வேகமாகத் துடிக்கிறது, எண்ணங்கள் அலைபாய்கிறது, இவையெல்லாம் உங்கள் மூளையின் செயல்பாடே. இதனை 'வாழ்வ தற்காக இயக்கமுறை' (Survival mechanism) என்றழைப் பார்கள்.

- 'பயம்' ஆரோக்கியமானது. 'பயம்' இல்லாமல் நீங்கள் வாழமுடியாது. 'பயப்படாதே' என்றால் பயம் இல்லாமல் வாழு என்பதல்ல அதன் அர்த்தம். ஆனால், 'பயத்தை மேற் கொண்டு வாழ வேண்டும்' என்பதே.
- பயம் பல வகைகளில் வெளிப்படுகிறது. மருத்துவப் பரிசோதனை ரிப்போர்ட்டைப் பார்க்க பயம், உங்கள் கண் எதிரில் ஒருவர் கொடூரமாக கொலை செய்யப்பட்டால், 'அந்த பயம்' உங்கள் மனதில் ஆழமாகப் பதிந்து விடுகிறது. நீண்ட நாள் நடுக்கம், கவலை, மனஅழுத்தம் இவை யெல்லாம் பயத்தின் பல்வேறு விதமான விளைவுகளே...!
- நீங்கள் ஆபத்தில் இருந்தால்தான் 'பயப்படுவீர்கள்' என்று சொல்ல முடி யாது. இல்லாதவற்றையும், நடந்து விடுமோ என்று யோசித்து அதனால் பயப்படுவதை Anticipatory anxiety என்பர். இதனால் தான் கவலைப்படுகிறீர்கள். அது நாளடைவில் மன அழுத்தத்திற்குள் உங்களைக் கொண்டு போய்விடும்.
- பயம் உங்களுடைய செயலை நிர்ணயிக்கிறது.

'பயம்' என்னும் உணர்வை பற்றி பல காரியங்களை தெரிந்து கொண்டோம். மூளையின் செயல்பாடே பயத்திற்கு காரணம். 'பயம்' என்பது இயல்பானதுதான்; பயப்படாமல் வாழ முடி யாது. இப்படி பல காரியங்களை பார்த்தோம். அட, பயம் இயல்பானது என்றால், பயப்படாமல் வாழ முடியாது என்றால் வேதத்தில் ஏன் "பயப்படாதே"! என்று 365 முறை தேவன் சொல்லியிருக்கிறார். பயப்படுவது சரியா? தவறா என்று உங்களுக்குள் நீங்கள் குழம்புவது எனக்கு புரிகிறது. அதையும் நான் இங்கு விளக்க விரும்புகிறேன்.

தேவனுக்கு பயப்படும் பயம்

- இந்த பயம் ஒவ்வொருவருக்கும் கட்டாயம் இருக்க வேண்டும்.
- இந்த பயம் நமக்குள் நாளுக்குநாள் அதிகரிக்க வேண் டும்.

தேவனுக்கு பயப்படும் பயம் இல்லாததால் தான், ஆகாப் ராஜா தன்னுடைய மனைவி யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளை (இஸ்ரவேலர்களை) கொலை செய்தபோது, துணிகரமாய் அதனை அவர் அனுமதித்தார். இது இறுதியில் ஆகாபின் குடும்பத்தையே நாசமாக்கியது.

தேவ பயம் இல்லையென்றால் துணிகரமாக பாவம் செய்வோம். இறுதியில் அது நம்மை நரகத்தில் தள்ளிவிடும்.

தேவ பயம் இல்லையென்றால் துணி கரமாக பாவம் செய்வோம். இறுதியில் அது நம்மை நரகத்தில் தள்ளிவிடும். எனவே தேவனுக்கு பயப்படுவது மிக அவசியம்.

மனிதர்களுக்கு பயப்படும் பயம்

- இல்லாதவற்றைப் பற்றி சிந்தித்து மற்றவைகளுக்காக பயப்படும் பயம்.
- இந்த பயத்திலிருந்து வெளியே வரவேண்டும்
- இந்த பயம் ஒவ்வொரு நாளும் குறைய வேண்டும்.

எதிர்காலத்தைப் பற்றிய பயம்

இது இயல்பானது, அடிக்கடி நம்மை அச்சுறுத்தக்கூடிய எண்ணங்கள் தான். எதிர்காலத்தை பற்றிய பயம், வேலை போய்விடுமோ என்ற பயம்... இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். இந்த எண்ணங்கள் தோன்றுவதாலேயே 'பயம்' என்னும் உணர்வு தலைதூக்குகிறது. எனவே இப்படிப்பட்ட

காரியங்களை சிந்திப்பதைத் தவிர்க்க வேண்டும். அதையும் மீறி சிந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், 'பயப்படா தீர்கள்'! தேவன் பார்த்துக் கொள்வார். இந்த பயம் தவிர்க்க முடியாத உணர்வு, ஆனால் நம்மால் அதனை மேற்கொள்ள முடியும்.

யாருக்கு பயப்பட வேண்டும், எதற்கு பயப்படக் கூடாது என்று இப்பொழுது புரிந்திருக்கும்! அதன் ஆணிவேரைப் பற்றி தெரிந்துக் கொண்டோமானால், சில பயங்களை நம்மால் தவிர்க்க முடியும்!

பயத்தின் வேர்கள்

1. கடந்த கால வாழ்க்கையில் ஏற்பட்ட மோசமான சம்பவத்தினால் விளைந்த பயம்:

- உங்களை ஒருவர் அல்லது பலர் தவறாக நடத்தியிருக்கலாம்...
- விபத்தை சந்தித்திருக்கலாம்...
- உங்களுக்குத் தெரிந்தவர் பாம்பு கடித்து மரித்திருக்கலாம்...

இப்படிப் பல சம்பவங்களை சொல்லிக் கொண்டே போகலாம். இவை அனைத்தும் உங்கள் மனதில் பதிந்திருப்பதால், ஒரு நபரைப் பார்க்கும்போது, வேகமாக வாகனத்தை ஓட்டும்போது, பாம்பைப் பார்க்கும்போது உங்களுக்குள் பயமும் நடுக்கமும் ஏற்படுகிறது. எனவே, பழைய சம்பவங்களே பயத்தின் ஓர் வேர்.

2. நீங்கள் பார்த்த, கேள்விப்பட்ட சம்பவங்கள்: குறிப்பாக திரைப்படத்தில் பார்த்த காட்சிகள் சிந்தையில் பதிவாகிவிடுகிறது. இதனை அசைபோடும்போது பயம் அதிகரிக்கிறது.

3. கற்பனையினால் ஏற்படும் பயம்: ஐயோ! என் பெற்றோரை இழந்து விடுவேனா? அவர்கள் மரித்துவிடுவார்களோ? இப்படி அளவிற்கு அதிகமாக யோசிப்பதினால் ஏற்படும் பயம்.

இந்த உணர்வை எப்படி மேற்கொள்வது? பயம் வந்தாலே தவறான முடிவுகள் எடுக்கிறேன்! சந்தோஷத்தை இழக்கிறேன்.

பயப்படுகிறீர்கள் என்றால், உங்களால் நிதானமாக சிந்திக்க முடியாது. எனவே அந்த உணர்வு தலைதூக்கும் போதே, உங்கள் சிந்தனையை திசைதிருப்புங்கள்

பயத்தை மேற்கொள்ள

- பயப்படுகிறீர்கள் என்றால், உங்களால் நிதானமாக சிந்திக்க முடியாது. எனவே அந்த உணர்வு தலைதூக்கும் போதே, உங்கள் சிந்தனையை திசைதிருப்புங்கள். 15 நிமிடங்கள் உங்கள் நண்பர்களுடன் நடைபயிற்சி செல்லுங்கள். ஃகாபி போட்டு குடியுங்கள், இசை வாசியுங்கள்.. உங்களை திசைதிருப்பி கொள்ளுங்கள்.
- எந்த சினிமா, Thriller காட்சி உங்களை பயப்படுத்துகிறதோ அப்படிப்பட்ட காட்சிகளைப் பார்க்காதீர்கள்.
- எப்போதும் எதிர்மறையாய்ப் பேசி உங்களை சோர்வுக் குள்ளாக்கும் நண்பர்களோடு சேராமல், உங்களைத் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தக் கூடியவர்களோடு பழகுங்கள்.
- உங்கள் பயத்தைப் பற்றி உங்கள் ஆலோசகரிடமோ அல்லது பெரியவர்களிடமோ சொல்லுங்கள். அதைப் பற்றி பேசினாலே 50% விடுதலையைப் பெற்றுக் கொள்வீர்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக தேவன் எனக்கு பயமுள்ள ஆவியைத் தரவில்லை (2 தீமோ.1:7) என்று ஒவ்வொரு நாளும் சத்தமாக வேதவசனத்தை அறிக்கையிடுங்கள். ஒவ்வொரு நாளும் பரிசுத்த ஆவியானவரின் துணையை நாடுங்கள்; உங்களை தைரியப்படுத்த ஜெபியுங்கள்; பயத்திற்கு எதிர்த்து நில்லுங்கள்...

ம்ம்... ஒருவழியாக 'பயம்' என்னும் உணர்ச்சியைப் பற்றியும், அதின் செயல்பாடு, அதின் காரணங்கள் மற்றும் அதனை மேற்கொள்ள வழிகளையும் பார்த்தோம். ஐயோ! எப்படி கடைபிடிக்கப் போகிறேன் என்று பயந்துவிடாதீர்கள்! உங்களால் பயத்தை சுலபமாக மேற்கொள்ள முடியும், நீங்கள் ஜெயிக்கப் பிறந்தவர்கள்!! ●

உணர்வுகள் தொடரும்...

புதிர் ரேச்சல்

Bible Quiz

வேதாகம

புதையல் வேட்டை

இம்மாதம் பெண்கள் தினத்தை சிறப்பிக்கும் வகையில் வேதத்தில் உள்ள பெண்களைக் குறித்த கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. சரியான விடையை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்

1. சீகார் ஊரிலுள்ள யாக்கோபின் கிணற்றருகில் வந்து இரட்சிப்பைப் பெற்ற பெண் யார்?
2. தன் சகோதரர்களை கொலைகாரர்களாக மாற்றி, ஒரு பட்டணத் தின் ஆண்கள் அழியக் காரணமாக இருந்த பெண் யார்?
3. அந்நிய தேசத்து ஸ்திரியாகிய இவள் வேதாகமத்தில் ஒரு புத்தகம் ஆனாள், இந்தப் பெண் யார்?
4. தான் கேள்விப்பட்டதை சந்தேகித்தபடியால், தூரம் அதிகமாக இருந்தாலும், போய் அந்த மனிதனை பரிசோதித்து வந்த பெண் யார்?
5. இயேசு உயிர்த்தெழுந்த பின், அவரை முதலில் தரிசித்த, இந்தப் பெண் யார்?
6. வேதத்தில் கூச்சப் பார்வை உள்ள பெண் யார்?
7. உலக ஆசையால் திரும்பிப் பார்த்து, இன்றும் அடையாளமாக நிற்கும் இந்தப் பெண் யார்?
8. இவள் ஒரு தீர்க்கதரிசி மற்றும் வஸ்திரசாலை விசாரிப்புகாரனின் மனைவி, இந்தப் பெண் யார்?
9. வீட்டிலிருந்தவர்களில் தேவமனிதனின் குரல் கேட்டு கதவைத் திறந்த, இந்தப் பெண் யார்?
10. இசைக் கருவி வாசித்து ஆடல் பாடலோடு தேவனை ம கிமைப்படுத்திய பெண் யார்?

கடந்த மாத
வெற்றியாளர்
சகோதரர் ஆரோக்கியசாமி,
மதுரை
அவர்களை
வாழ்த்துகிறோம்.

கடந்த மாத விடைகள்

1. லபிதோத், தெபோராள்
2. அனனியா, சப்பீராள்
3. ஓசியா, கோமேர்
4. கூசா, யோவன்னா
5. யாக்கோபு, ராகேல்
6. ஆக்கில்லா, பிரிஸ்கில்லா
7. சகரியா, எலிசபெத்
8. பேலிக்ஸ், துருசில்லா
9. சாலொமோன், நாமாள்
10. சல்மோன், ராகாப்

எழுதி அனுப்ப வேண்டிய கடைசி நாள் 15.03.2019

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி: JESUS REDEEMS YOUTH MINISTRIES
Nalumavadi, Thoothukudi Dist - 629 211
Cell: 9750955547 | Tel: 04639- 220022 | youth@jesusredeems.org

சுவடுகள்
ரெக்ஸ் கிளமெண்ட்

Online சினேகா

காலை 8 மணி... குளிர்காலமும், கோடை காலமும் இரண்டும் கலந்த, ஜில்லென காற்றும், சுளீர் என சூரியனும், பட்டொளி வீசிக்கொண்டிருந்த அந்த வேளையில்...

டேய் சனியன்களா! எழும்புங்க! என கத்திக் கொண்டே அந்த நடுத்தர வயது அம்மா சினேகாவின் பெட்ரூம் கதவை பலமாக தட்டினாள். பொதிந்த பொம்மைபோல் போர்வைக் குள் இருந்த சினேகா எழுந்தாள்... ச்சே... காலை யிலயே ஆரம்பிச்சீட்டீங் களா... என எழுந்து கதவைத் திறந்தாள். என் னம்மா காலங்காத்தால? எனக் கேட்டாள்... ஆமாடி சொல்லுவ, இது காலங்காத்தாலயா? மணி 8 ஆகுது... அம்மா இன்னிக்கு சனிக்கிழமை மா... காலேஜ் லீவ் மா... ஏன் இப்படி டிஸ்டர்ப் பண்றீங்க? எனக் கோப மாக கேட்டாள்... ஆமா நான் டிஸ்டர்ப் பண்றேன்... இன்னிக்கு லீவ் ஆயிச்சே அம்மாவுக்கு ஹெல்ப் பண்ணுவோம் என்று இல்ல, இழுத்து போர்த்தி கிட்டு தூங்குற என்றாள்.

ஏன் என்னை மட்டும் எழுப்புறீங்க, உங்க செல்ல மகனையும் எழுப்ப வேண்டியதுதானே என்றாள் சினேகா..

அட நீ வேற... அவனையும் சேர்த்துதான் எழுப்பி னேன். கொஞ்ச நேரம் தூங்கட்டும், நடுராத்திரி எப்போ வந்து படுத்தானோ? தெரியல என்றாள்.

ஆமா ஆம்பள புள்ளைனா, எப்ப வேண்டுமானாலும் வீட்டிற்கு வரலாம், என்ன வேண்டுமானாலும் செய்ய லாம்.. வேலை வெட்டி இல்லாத மகனுக்கு சப்போர்ட் பண்ணுங்க... எனக் கோபமாக பேசிக்கொண்டே தலைமுடியை சுருட்டி கிளிப் போட்டு, சரி நீங்க போங்க நான் அண்ணனை எழுப்பிட்டு வரேன் என பாத்ரூம் சென்று தன்னை சுறுசுறுப்பாக்கிக் கொண்டு, தன் அண்ணன் ரூமுக்குள் நுழைந்தாள்.

ஒரு குவளை தண்ணீர் எடுத்து அவன் மேல் ஊற்றினாள். சிம்சோன் அலறிக்கொண்டு எழுந்தான். டேய் சிம்சோன், எழும்புடா, என பெட்சீட்டை உருவினாள்.

ஏண்டி, இப்படி இரண்டு பொம்பளைங்களும் தொந்தரவு செய்றீங்க! நிம்மதியா தூங்க விட மாட்றீங்க, என தலையணையை தூக்கி எறிந்தான்.

சரி வாண்ணா, நீ இல்லாம நான் காலை டிபன் சாப்பிட்டது கிடையாது. பிரஷ் பண்ணிவிட்டு வா, நாம சாப்பிடலாம்... இல்லன்னா நம்ம பஜாரி கத்த ஆரம்பிச்சிடும் என சிரிச்சிக்கிட்டே சினேகா சொன்னாள். கிச்சனில் அம்மா பரபரப்பாக வேலைக்காரியை வேலை வாங்கிக் கொண்டி ருந்தாள். சினேகா, கடமுறைக்காக இரண்டு வசனத்தை வாசித்துவிட்டு, 2 நிமிடம் கண்மூடி ஏதோ முணுமுணுத்தாள்... வர வேற்பறையில் இருந்த தன் தந்தையின் உருவப் படத்தை கைகூப்பி வணங்கினாள். அவள் கண் திறந்தபோது கண் லேசாய் கலங்கியிருந்தது.

சினேகாவின் அப்பா இறந்து 2 மாதம் தான் ஆகியிருந்தது.

இரண்டு பேரும் வாங்க... சூடா பொங்கல் சாப்பிடலாம் என அம்மா அழைக்க, சினேகா தன் கையில் இருந்த மொபைல் ஃபோனை எடுத்து தடவிக் கொண்டே டைனிங் டேபிள் பக்கம் வந்தாள்.

அதே நேரம் சிம்சோனும் மொபைல் ஃபோனை நோண் டிக் கொண்டிருந்தான்.

காலையிலேயே ஆரம்பிச்சிட்டீங்களா? இந்த மொபைல் ஃபோன் பிசாசை மொதல்ல தண்டவாளத்தில் போய் வைக்கணும் என கோப மாகக் கூறிக்கொண்டே அம்மா சுட சுட பொங்கல் பரிமாறினாள். அம்மா மெதுவடை இல்லையா? என சினேகா கேட்க... துடப்பகட்டை தான் வரும்... காலையிலேயே கூடமாட வந்து உதவி செய்யமாட்ட,

ஆனா மெதுவடை வேணுமாம்... கொஞ்ச இரு மெதுவாக தான் மெதுவடை வரும் என கிச்சன் சென்றாள். சிம்சோனும், சினேகாவும் மொபைல் ஃபோனை நோண்டிக் கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அந்த வேளையில் திடீரென சினேகா முகம் மலர்ந்தவளாய், பிளேட்டை கையில் எடுத்துக் கொண்டு மேல்மாடிக்கு ஓடினாள். மெதுவடையுடன் வந்த அம்மா, சினேகா இல்லாததும்... எங்கடா சினேகா? ஆமா உங்க செல்ல மகள் ஃபோனையும், பிளேட்டையும் தூக்கிட்டு மேலே போயிருக்கா... அம்மா கோபமான பார்வையில் மெதுவடையை சிம்சோன் பிளேட்டில் டொக் என வைத்தாள்.

மெதுவா வையுங்கம்மா...

சிம்சோன் கண்டும் காணாதவனாய் மொபைல் போனை மீண்டும் நோண்டிக் கொண்டிருந்தான்.

அதே நேரம் சினேகா தன் ஃபேஸ் புக் Messengerரில் chat பண்ணிக்கொண்டிருந்தாள்.

Good morning

Miss u da

Today holiday

yes

So atleast today we will meet?

Okay I will try

Pl. confirm we should meet today

where?

will inform later

Theatre?

No

some other place

சினேகா உள்ளத்தில் சந்தோஷம் கொப்பளித்தது. அநேக நாட்களாக காத்திருந்த ஆசை இன்றைக்கு நிறை வேறப் போவதை எண்ணி வேகமாகத் தட்டில் இருந்த பொங்கலை விழுங்கினாள்.

அதற்குள் சிம்சோன் உள்ளே நுழைய மொபைல் போனை மறைத்து Logout செய்தாள். ஏய், என்ன பண்ணிகிட்டு இருக்க? அம்மா உனக்காக மெதுவடை ஆசையா செய்தாங்க... நீ மிஸ் பண்ணிட்ட, Crispy மெதுவடை சூப்பரா இருந்திச்சு... என சிம்சோன் கூறி விட்டு தன் அறைக்குள் சென்றான்.

சினேகாவின் மொபைல் ஃபோனில் மறுபடியும் Notification ஒலி ஒலித்தது. Messengerயை திறந்து பார்த்தாள்.

Are you there!

yes

5pm evening ECR okay?

ECR? where?

Near Mayajal?

Okay! sure

come to Mayajal and text me

your number please

I will give you later?

No... you give me first

Your Name?

Preethi is it your real name?

No

What is your real name & number?

I will meet you and give all my details

Your are handsome

Is it you?

🙂 🙂 🙂

சிம்சோன் சினேகாவை அழைத்தான்... சினேகா உனக்கு புதுமாடல் போன் Samsung S8 plus இந்தா... சூப்பர் அண்ணா use பண்ன மாதிரி இருக்கு?

ஆமா என் நண்பன் Cheapஆ கொடுத்தான். உனக்கு Usefulஆக இருக்கும் என கையில் கொடுத்து விட்டு, நான் வெளியே போறேன், இன்னிக்கும் லேட்டாகும் என்றான் சிம்சோன். ஆமா நீ எங்க போறே?

நான் என் Friend வீட்டுக்கு Birthday Partyக்கு போகிறேன் என்றாள்... எங்கே என்றான்?... ECR அண்ணா... என திருதிருவென முழித்தாள். சரி என்ஜாய் என கூறிவிட்டு தன் அறைக்குள் சென்றான்.

சிறிது நேரம் கடந்தது. மீண்டும் சினேகா மொபைல் போனில் Messenger Notification ஒலி ஒலித்தது.

Hi

Yes 5 pm okay

yes

I will wait in my Yamaha R15 black colour bike

Bike No?.

I will inform. You come to Mayajal.

Okay

மாலை 3 மணிக்கு பரபரப்பாக சினேகா புறப்பட்டாள். அழகிய Diamond Pendant அணிந்து கொண்டாள். தன் கைப்பையை எடுத்துக்கொண்டு, தன் அண்ணன் கொடுத்த புது மாடல் மொபைல் ஃபோனையும் பையில் எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

வேகமாக கீழே இறங்கினவளை, அம்மா பார்த்து, எங்கடி போற? என்றாள்... அம்மா என் தோழிக்கு பிறந்தநாள் பார்ட்டி, ECR, வரை போய்ட்டு வறேன் என்றாள்.

ஏண்டி, டைமண்ட் நகையெல்லாம் போட்டுப் போறே, பத்திரம்... காலம் கெட்டுக் கிடக்கு என கூறிவிட்டு சலித்துக் கொண்டே “இந்த காலத்து புள்ளைகளுக்கு தைரியமும், விவே கமும் ஜாஸ்தி” எங்கபோய் முடியப் போகுதோ என முணங்கிக்கொண்டு மேலே சென்றாள்.

ஏதோ நினைத்தவளாக சினேகா Bye என்றாள். சினேகாவும் சிரித்த முகத்தோடு Byeமா என டாடா காட்டி விட்டு கால்டாக்சியில் ஏறினாள்.

கார் ECR நோக்கி பயணமானது. Mayajal வந்து சேர்ந்தாள்... Messengerரில் டைப் செய்தாள்

I am here

Where are you?

come to Bike parking on basment 2

okay

Bike parking நோக்கி சினேகா நடந்தாள்.. தன் ஆசை நாயகனை முதன்முதலில் பார்க்க அவள் மனம் துடித்தது.

லிப்டில் Basement 2 வந்திறங்கி னாள். அங்கே கருப்பு நிற புது Yamaha R15 பைக்கில் ஒரு இளை ஞன் நின்றுக் கொண்டிருந்தான்.

Where are U?

என text பண்ணினாள்.

I am here என லைட் ஆன் செய்து காட்டினாள்.

ஹெல்மெட் அணிந்திருந்த அந்த இளைஞனின் அருகில் வந்தாள்.

Hi என சொன்னாள்!

Hi so pretty

Come on sit, we will have a ride

சினேகா அவன் முதுகைப் பிடித்து, அந்த உயர்ந்த பின் இருக்கையில் அமர்ந்தாள்.

பைக் விர்ரென புறப்பட்டது...

தன் ஆசை நாயகனோடு இப்படி பயணம் செய்வோம் என கண்ட கனவு நிறைவேறியதை எண்ணி அப்படியே மிதப்பதைப்போல உணர்ந்தாள்.

ECR பிரதான சாலையில் கோவளம் நோக்கி பைக் வேகமாக சென்றுக் கொண்டிருந்தது.

ஒருநாள் தன் ஆசை நாயகனோடு இப்படி பயணம் செய்வோம் என தான் கண்ட கனவு நிறைவேறி யதை எண்ணி அப்படியே மிதப்ப தைப்போல உணர்ந்தாள். அவன் முகத்தைக் காண துடித்தாள்.

பைக் ஓட்டினவன் மிதமான வேகத்தில் ஓட்டி, பின் ஒரு சவுக்கு தோப்புக்கு உள்ளே நுழைந்தான்.

அடர்ந்த அந்த சவுக்கு தோப்பில் யாரும் இல்லை! மெல்ல வானம் சிவந்து, மாலை சந்தியா நேரம் அது. அந்நேரம் சினேகா அங்கும் இங்கும் பார்த்தாள். யாரும் இல் லாத தோப்பு.

அவன் இங்கு பல தடவை வந்தி ருக்க வேண்டும் என அவள் மன திற்குள் தோன்றியது. அப்பொழுது அம்மாவின் போன் ஒலித்தது. எங்கடி இருக்க? போய் சேர்ந்திட் டியா? ஆமா ம்மா போய் சேர்ந்திட் டேன் என சொல்ல... பைக் நின்றது...

பாஸ் நம்ம திட்டம் Workout ஆயிடிச்சி... உங்க Fake FB மூலம் ஒரு பச்சைக் கிளியை பிளான் பண்ணி set பண்ணிட்டீங்க... விவேக் அந்தப் பெண்ணை கடத்தி கிட்டு வந்திட்டான், இந்த தடவையும் சக்சஸ் தான் பாஸ் என்றான். அந்த ,கருநிற குறுந்தாடி வாலிபன்... சூப்பர் டா.. இன்னிக்கு சரியான வேட்டை என அந்த பாஸ் சொன்னான்.

டேய் விவேக்கிற்கு SMS பண்ணு அந்தப் பொண்ணை கிணற்று மோட்டார் ரூம் பக்கம் ஏமாற்றி

கூட்டிக்கிட்டு போகச் சொல்லு... நம்ம ஆளுங்க நாலு பேரும் அவளைப் பார்த்துக்கோங்க, நான் கடைசியாக வர்றேன்...

டேய் அவள் காதுல, கழுத்துல கிடக்கிறது, மொபைல் போன் எல் லாத்தையும் எடுத்து முதல்ல என் னிடம் குடு என்றான் அந்த பாஸ்...

ஓகே பாஸ்... நான் போயிட்டு கையில் கிடக்கிறதை எடுத்துகிட்டு வரேன். என அந்த பாழடைந்த மோட்டார் ரூம் நோக்கி சென்றான்.

பைக்கில் சினேகாவோடு வந்த விவேக், அந்த மோட்டார் அறைப் பக்கம் வந்து பைக்கை நிறுத்தி விட்டு மெல்ல ஹெல்மெட்டை கழற்றினான்.

அவன் மிக அழகாய் சிவந்த நிறமாக இருந்தான். சினேகா அவனை அப்படியே பார்த்து ரசித்தாள். வா.. பேசிக்கொண்டே கடற்கரைக்கு போகலாம் என அவள் கையை மெல்லப் பிடித்தவனாக நடக்க ஆரம்பித்தான்.

அந்த மோட்டார் அறை அருகில் இருவரும் கடந்துபோகும்போது மூன்றுபேர் திடீரென அந்த ரூமில் இருந்து வெளியே வந்தனர்.

சினேகாவை அப்படியே தூக்கிக் கொண்டு அந்த அறைக்குள் சென்றனர். சினேகா பதற்றத்தோடு கத்தினாள். பைக்கில் வந்த விவேக் கும் அந்த அறைக்குள் சென்றான். சினேகா மீண்டும் கதறினாள், புழுவாகத் துடித்தாள். அவள் மேலும் சத்தம் போடாதபடி அவள் வாயில் துணியை வைத்துக் கட்டினார்கள். அவள் போட்டிருந்த நகைகளை கழற்றினர். மொபைல் ஃபோனை எடுத்தனர். அவள் கைப்பையில் இருந்த பணத்தையும், சினேகா அண்ணன் பரிசளித்த மொபைல் போனையும் எடுத்துக் கொண்டனர். அந்த குறுந்தாடிக்காரன் அவை எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு தன் பாஸ் இருந்த பக்கம் ஓடினான். மற்றவர்கள் சினேகாவை சின்னாபின்னமாக்கினர்.

பாஸ் அருகில் வந்தவன், பாஸ்.... அந்த பொண்ணு அணிந்திருந்த நகைகள் மற்றும் மொபைல் போன் கள் நல்ல வேட்டை தான் பாஸ்... இது டைமண்ட் போல இருக்கு என கூறி அந்த பாஸ் கையில் கொடுத்தான். அதை பார்த்த பாஸ்... அதிர்ச்சி யடைந்தவனாக, அந்த மொபைல் போன்களையும், நகைகளையும் மாறி மாறி பார்த்தான். மேலும் அதிர்ச்சியடைந்து, முகம் சிவந்து, No என கத்திவிட்டு மோட்டார் ரூம் பக்கம் ஓட ஆரம்பித்தான். குறுந்தாடி இளைஞன் முழித்தான்...

பாஸாக ஒடிக்கொண்டிருந்தது சிம்சோன்.... சினேகாவின் செல்ல அண்ணன்...

சிம்சோன் மோட்டார் அறைக்குள் ஓடிச் சென்று பார்த்தபோது... சினேகா சின்னாபின்னமாக்கப்பட்டிருந்தாள். சிம்சோனைப் பார்த்து, அண்ணே... என கதறினாள்.

சிம்சோன் அழுது துடித்து, ஐயோ! என் தலையில நானே மண்ணை

வாரி போட்டுட்டேனே எனக் கத்தி னான். அவன் நண்பர்கள் அவனை ஆச்சரியமாய்ப் பார்த்தனர்.

ஐயோ! என கதறிய சிம்சோன் அந்த மோட்டார் ரூம் அருகில் இருந்த தண்ணீர் இல்லாத அந்த பாழும் கிணற்றில் குதித்தான்; மண்டை உடைந்து அங்கேயே செத்தான்.

மற்ற அனைவரும் சினேகாவை அப்படியே விட்டுவிட்டு ஓடினர்.

மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் (கலா.6:7).

அன்பு இளைஞர்களே! சமூக வலைதளம் என்னும் மாய வலையில் சிக்கி அழிந்து விடா தீர்கள். முன்னே பின்னே தெரி யாத நபர்களிடம் Chat செய்து சினேகாவைப் போல சிக்கிக் கொள்ளாதீர்கள். சிம்சோனைப் போல மற்றவர்கள் வாழ்வையும் சீரழிக்காதீர்கள். அநேக Fake FaceBook Profile கொண்டு இன்று இளம் பெண்கள் இப்படி ஏமாற்றப்படுகின்றனர்.

நமக்கு இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் தேவன் கொடுத்த வெகு மதி. காலத்தை விரயம் செய்தால் அதை மீண்டும் மீட்டிட முடியாது. உங்கள் பொன்னான நேரத்தை உங்கள் எதிர்காலத்தின் நன்மைக் காகவும், தேவனுக்காகவும் பயன்படுத்துங்கள். உங்கள் வாழ்க்கையின் மூலம் உங்களை சிருஷ்டித்த தேவன் மகிமைப்படுவாராக! ஆமென்!! ●

சிந்தனை சிதறல்
ரெபேக்கா

தேவ பயத்துடன்

யோபு



ஊத்ஸ் என்ற ஊரில் யோபு என்கிற மனிதன் வாழ்ந்து வந்தார். தேவனுக்கு பயந்தவராய் காணப்பட்டார். அவருக்கு 10 பிள்ளைகள், ஏழாயிரம் ஆடுகள், மூவாயிரம் ஒட்டகங்கள், ஐநூறு எருதுகள், ஐநூறு கழுதைகள் திரளான வேலையாட்கள் போன்ற பல செல்வத்துடன் யோபு வாழ்ந்து வந்தார். யோபுவின் மேல் கவனம் வைத்த சாத்தான், அவருக்கு இருந்த எல் லாவற்றையும் அவரிடமிருந்து பறித்தான். சரீரத்தையும் விட்டுவைக்காமல் பருக்களினால் நிரம்பினான். இவ்வளவு துன்பங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்த யோபு பாவஞ்செய்யவுமில்லை, தேவனைப் பற்றிக் குறை சொல்லவுமில்லை (யோபு 1:22). அதற்குக் காரணம் அவனுடைய தேவ பயத்தின் விளைவே. இத்தனை பாடுகளை சுமந்தபோதும், தேவனைத் தவறாகப் பேசவோ, குறைகூறவோ அவன் தன் நாவை பயன்படுத்தவில்லை.

ஆனால், இன்றைக்கு ஒரு இழப்பு அல்லது தோல்வி வந்துவிட்டால், நம் நாவை எப்படி பிரயோகிக்கிறோம். யோபுவைப் போல தேவ பயம் இருந்தால் நாம் நாவை உயர்த்த துணிவதில்லை!

தேவ பயம்

சாலொமோன்

வேதாகமத்தில் பார்த்தால் சாலொமோன் ராஜாவைப்போல் ஒரு ஞானமுள்ள மனிதன் தோன்றியதுமில்லை, இனிமேல் எழும்பப் போவதுமில்லை. ஆரம்ப காலத்தில் கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் இருந்த காரணத்தினால் சாலொமோன் கர்த்தரிடம் வேண்டிக்கொண்டபடியே தேவன் விசேஷமான ஞானத்தை சாலொமோனிற்குத் தந்தார். அந்த ஞானத்தினால் நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு ஆகிய மூன்று புத்தகங்களை சாலொமோன் எழுதினார். ஆனால் சாலொமோன் தன்னுடைய வாழ்வின் இறுதிக் கட்டத்தில் தேவனுக்கு பயப்படாமல் விக்கிரகங்களை வணங்கி, தேவனுக்குப் பிரியமில்லாத காரியத்தை செய்து, தன்னுடைய சந்ததிக்கு சாபத்தை சேர்த்து வைத்தவராக இருந்தார் (1 இராஜா.11).

அநேக நேரம் ஆரம்பம் அமர்க்களமாய் இருக்கலாம், ஆனால் இறுதிவரை நிலைத்து நின்று, தேவன் மீது நாம் வைத்திருக்கும் அன்பையும், நடுக்கத்தையும் வெளிப்படுத்த வேண்டும்.

நாம் துணிகரமாய் காரியங்களை செய்யும்போது, அவரின் கிருபையின் கரம் நம்மைவிட்டு எடுக்கப்பட்டு பரிதபிக்க வேண்டியதாகும்!

வாழ்ந்தவர்கள்

யோசேப்பு

தன் வாலிபத்தில் தடம்புரளும் அநேகர் இருக்கும்போது, தனக்கு தவறு செய்ய தருணம் வந்தபோதும், யோசேப்பின் தேவ பயம் அவனை அந்தத் துணிகரப் பாவத்துக்கு விலக்கிக் காத்தது. பாவம் செய்ய தருணம் வரும்போது தேவனைக் குறித்த சிந்தையே இல் லாமல் போவதால் தான் அநேக வாலிபர்கள் பாவத்தில் தடுமாறி விழுகிறார்கள். ஆனால் யோசேப்பின் தேவபயம், அவனை அகல பாதாளமாகிய சிறைக்குத் தள்ளியது. பாவத்துக்கு உடன் போகவில்லை என்றால் பதவி போகும், வசதி போகும், மறுபடியும் அடிமைத்தனம் விஸ்வரூபம் எடுக்கும் என்று அறிந்தபோதும், யோசேப்பின் தேவபயம் துணிந்து பாவத்தை தூரத் தள்ளிற்று.

இன்றைக்கு உன்னுடைய இருதயத்தில் தேவபயம் நிலைகொண்டால், தீயைப் போல் உன்னை எதிர்க்க வரும் பாவமாகிய நெருப்பை அணைக்க அவரின் வல்லமை போதுமானது!

இல்லாதவர்கள்

ஓப்னி, பினெகாஸ்



ஏலி இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆசாரியனாகவும் நியாயாதிபதியாகவும் 40 வருடங்கள் கர்த்தருக்கு முன்பாக இருந்து வந்தார். ஆனால் அவருடைய பிள்ளைகளாகிய ஓப்னியும், பினெகாசும் இவருக்கு மாறாக செயல்பட்டனர். தேவ பயம் இல்லாதவர்களாய் கர்த்தருடைய சமூகத்தில் துணிகரமாய் அநேகப் பாவங்களை செய்து வந்தனர். ஏலி இதை குறித்தும் எச்சரித்தும் கேட்க மனமில்லாமல் பேலியாளின் மகன்களாய் வாழ்ந்தனர். கர்த்தருடைய காணிக்கையை அபகரித்து, இஸ்ரவேல் ஜனங்களை ஏமாற்றி பலவந்தப்படுத்தி தேவகோபத்திற்கு உள்ளானார்கள். தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கிருபையின் நாட்களை பிரயோஜனப்படுத்திக் கொள்ளாததினால் தேவ கோபம் இவர்கள்மேல் வந்தது. (1 சாமு. 3,4)

கர்த்தரைக் குறித்த பயம் நம்மைவிட்டு விலகும்போது, ஊழியக்காரரின் பிள்ளைகளாய் இருந்தாலும் அவரின் நியாயத்தீர்ப்புக்கு நாம் தப்ப முடியாது. கிருபை பல நாள் நிற்காது. தேவ கோபம் முந்திக்கொள்ளும். எனவே தேவ பயத்தைக் குறித்து கவனம் தேவை!!

செய்தி

மோகன் சி. லாசரஸ்

ஜெயமே கர்த்தரால் வரும்!

உங்கள் படிப்பில், வேலையில், தொழிலில் எந்தக் காரியத்தில் ஜெயம் வேண்டும், என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களோ; அந்தக் காரியத்தில் உங்களுக்கு ஜெயம் வரும்.

“கோலியாத்” என்ற ஒரு ராட்சதனை ஜெயிப்பதற்கு, ‘தாவீது’ என்ற ஒரு இளம் வாலிபனுக்கு கர்த்தர் உதவி செய்த சம்பவம், பரிசுத்த வேதாகமத்தில் 1 சாமுவேல் 17ஆம் அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அன்று, தாவீதுக்கு ஜெயம் கொடுத்த கர்த்தர், இன்று உங்களுக்கும் ஜெயம் தருவார். தாவீதுக்கு கர்த்தர் எப்படி ஜெயம் கொடுத்தார் என்பதை நாம் அறிந்துகொண்டால், நாமும் சுலபமாக ஜெயம் எடுக்கலாம். கோலியாத் என்கிற ஒரு பெலிஸ்தன் சுமார் 10 அடி உயரமுள்ள ஒரு ராட்சதன்! இஸ்ரவேலின் சேனையை அவன் பயமுறுத்திக் கொண்டிருந்தான். அவனுடைய உருவத்தையும், அவன் பேசிய ஏளனமான வார்த்தைகளையும் கேட்டு, இஸ்ரவேலின் ராஜாவும், படை வீரர்களும் பயந்து கொண்டிருந்தார்கள், அவனோடு யுத்தம் பண்ண யாரும் முன்வரவில்லை. அந்த சமயத்தில்தான், ஆடு மேய்த்துக் கொண்டிருந்த இளம் வாலிபனாகிய தாவீது, “நான் போய், அந்த ராட்சதனோடு யுத்தம் பண்ணுகிறேன்” என்றார்.

தாவீதுக்கோ யுத்தத்தில் பழக்கம் கிடையாது! போர் வீரர்களின் உடையை உடுத்திக்கொண்டு, நடக்கக் கூடத் தெரியவில்லை! பட்டயத்தை எடுத்து சண்டை போடத் தெரியாது, ஆனால் தைரியமாக அந்த ராட்சதனை தாவீது சந்தித்தார்! மேய்ப்பர்கள் வைத்திருக்கும் கவண் கல்லை வைத்து, அந்த ராட்சதனை ஜெயித்தார்!

பயப்படாதீர்கள்!

நீங்கள் எழுதப்போகும் அரசாங்கத் தேர்வு, நீங்கள் சந்திக்கப் போகும் நேர்முகத் தேர்வு, உங்களுக்கு வந்திருக்கும் பிரச்சனைகள், உங்களுக்கு ஒரு கோலியாத்தைப்போல தெரியலாம்! பயம்தான், அநேகருடைய தோல்விக்கு காரணமாகி விடுகிறது! நாம் பயப்படும் போது, சாத்தான் அதில் செயல்பட முடியும். ஆகவேதான் கர்த்தர், ‘பயப்படாதே!’ ‘பயப்படாதீர்கள்!’ என்று பரிசுத்த வேதாகமம் முழுவதும் சொல்லி வைத்திருக்கிறார். நீங்கள் பயப்படும்போது, சாத்தான் உங்களை ஜெயித்துவிட முடியும்.

ஆகவே “நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்” (ஏசாயா 41:10) என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்கிறார். “கர்த்தராகிய இயேசு என்னுடனே இருக்கிறார். நான் பயப்படமாட்டேன்” என்று தைரியமாகச் சொல்லுங்கள்.

தைரியமாக நீங்கள் தேர்வு எழுத வேண்டும்! தைரியமாக நீங்கள் பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டும்! தைரியமாக நீங்கள் சாத்தானை எதிர்த்து நிற்க வேண்டும்! அப்பொழுது கர்த்தராகிய இயேசு உங்களுக்கு வெற்றியைத் தருவார். இயேசுவால் தீர்க்க முடியாத பிரச்சனை ஒன்றும் உங்களுக்கு வரப்போவதில்லை. அவர் எல்லாக் காரியத்திலும் உங்களுக்கு ஜெயம் தருவார். பயத்தைக் கொண்டுவருகிற சாத்தானை கடிந்துகொள்ளுங்கள். “என் கர்த்தராகிய இயேசு எனக்கு ஜெயம் தருவார்” என்று சொல்லுங்கள். ஜெயம் பெறுவீர்கள்.

தாவீது தைரியமாக கோலியாத்தைச் சந்தித்து ஜெயம் பெற்றார். நீங்களும் தைரியமாக தேர்வை, பிரச்சனைகளை, போராட்டங்களை சந்தியுங்கள். ஜெயம் பெறுங்கள்!

தாவீது எப்படி ஜெயம் பெற்றார்? நாம் எப்படி ஜெயிக்க முடியும்?

முந்தின வெற்றிகளை நினைத்துக் கொள்ளுங்கள்!

தாவீது, ஆடு மேய்த்துக் கொண்டிருந்த ஒரு இளம் வாலிபன். கோலியாத் யுத் தத்தில் பயிற்சி பெற்ற ஒரு பெரிய ராட்சதன் (1 சாமு.17:34-37).

தாவீது தனக்கு முன்பாக இருந்த பிரச் சனையை (கோலியத்தை) நோக்கிப் பார்க்காதபடி, தனக்கு கர்த்தர் கொடுத்த முந்தின வெற்றிகளைச் சிந்தித்துப் பார்த்தார். ஆகவே தாவீது, தைரியத் தோடு பிரச்சனையை எதிர்கொண்டார்.

ஒருசமயம் ஒரு தாயார் +2 படித்துக் கொண்டிருந்த தன் மகளை, என்னிடத் தில் ஜெபிக்க அழைத்துக் கொண்டு வந் தார்கள். "இந்த ஆண்டு இவள் +2 தேர்வு எழுதப் போகிறாள், இவள் எடுக்கிற மார்க் கில்தான், இவளுடைய எதிர்காலமே இருக்கிறது. இவளுக்காக ஜெபியுங்கள்" என்றார்கள். நான் அந்த மகளைப் பார்த் தேன். தாய் சொன்னதை கேட்ட அவளுக் குள், ஒரு பய உணர்வு இருப்பதை பார்த் தேன். "+1 வரை நீ வெற்றிபெற்றுதானே, +2 படிக்க வந்தாய்?" என்றேன். "ஆம்" என்றாள். +1 வரை வெற்றிக் கொடுத்த கர்த்தர் இந்த +2 தேர்விலும் உனக்கு ஜெயம் தருவார்!" என்றேன். தன் முந் தின வெற்றிகளை நினைத்தவுடன் அவ ளுக்குள் ஒரு தைரியம் உண்டானதை என்னால் பார்க்க முடிந்தது. "உனக்கு இதுவரை உன் படிப்பில் வெற்றி கொடுத்த கர்த்தர், இந்த வருடத்திலும் உனக்கு வெற்றி தருவார்!" என்று சொல்லி ஜெபித்தபோது, அவள் மகிழ்ச்சியோடு சென்றாள், ஜெயமும் பெற்றாள்.

கர்த்தர் உங்களை நடத்திவந்த விதத்தை எண்ணிப் பாருங்கள். உங்களுக்கு அவர் கொடுத்த வெற்றிகளை, அவர் செய்த அற்புதங்களை நினைத்துப் பாருங்கள்.

கர்த்தரைச் சார்ந்து கொள்ளுங்கள்!

தாவீது, அந்த கோலியாத்தோடு யுத்தம் செய்யச் சென்றபோது, தன் கையில் மேய்ப்பனுக்குரிய தடியோடும், கவணோ டும் அவனண்டையிலே போனார். கோலியாத்தோ, யுத்த வீரனுக்குரிய உடைகளை அணிந்து, யுத்த ஆயுதங் களை தன் கைகளில் பிடித்தவனாக நின் றான்.

அந்த ராட்சதன் தாவீதைப் பார்த்து, "நீ தடிகளோடே என்னிடத்தில் வர நான் நாயா என்று சொல்லி, அவன் தன் தேவர்களைக்கொண்டு தாவீதை சபித் தான், அதற்குத் தாவீது: பெலிஸ்தனை (கோலியாத்தை) நோக்கி: நீ பட்டயத் தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங் களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்" (1 சாமுவேல் 17:43,45) என்றார்.

தாவீது, அந்த ராட்சதனோடு யுத்தத்திற்குச் சென்றபோது, தன் திறமைகளையோ, தன் முன் அனுபவங்களையோ சார்ந்து கொள்ளாமல், தன் கர்த்தரை மாத்திரமே சார்ந்து கொண்டார்.

ஒரு சமயம் தேர்வில் தோல்விய டைந்த ஒரு மகள், வேதனையோடு எனக்கு இப்படியாக ஒரு கடிதம் எழுதி யிருந்தாள். "எந்தவொரு பாடத்திலும் நான் இதுவரை தோல்வியடைந்ததே இல்லை. இரவு நேரங்களில் வெகு நேரம் விழித்திருந்து, கடினமாகத் தான் படித்தேன். ஜெபமெல்லாம் செய் தேன், என்றாலும் நான் தோல்விய டைந்துவிட்டேன். இதை என்னால் நம்பவே முடியவில்லை. என்று எழுதியிருந்தாள்.

நான் அந்த மகளுக்காக ஜெபித்த போது, அவள் கர்த்தரை முழுமை யாக சார்ந்து கொள்ளாமல், வழக்கத்தின்படி ஜெபித்தாள், தன் திறமையை, படிப்பை நம்பி, "நான் வெற்றி பெறு வேன்!" என்று பெருமையாக எண்ணினாள். அதனால் தான் அவள் தோல்வியடைந் திருக்கிறாள் என்பதை அறிந்து ஜெபத்தோடு அவ ளுக்குப் பதில் கடிதம் எழுதி னேன். அவள் அதை ஒத்துக்கொண்டாள். தன் தவறை உணர்ந்து

உனக்கு இதுவரை உன் படிப்பில் வெற்றி கொடுத்த கர்த்தர், இந்த வருடத்திலும் உனக்கு வெற்றி தருவார்!

மனந்திரும்பினாள். அதற்குப் பிறகு, அவள் படிக்கும்போதும், தேர்வு எழுதும்போதும், கர்த்தரையே சார்ந்து கொண்டாள். மறுபடியும் அவள் தேர்வு எழுதியபோது, எதிர்பாராத அளவு அதிக மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற் றாள். "இப்பொழுது நான் கர்த்தரை சார்ந்து கொள்ளக் கற்றுக் கொண டேன்" என்று எனக்குக் கடிதம் எழுதி னாள்.

இன்று உங்கள் வெற்றிக்காக, ஆசீர்வாதத்திற்காக, உங்களை அல்லது உங்கள் திறமைகளை நீங்கள் சார்ந்து நிற்கிறீர்களா? அல்லது, கர்த்தரை சார்ந்து நிற்கிறீர்களா? "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவி னாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெல னுண்டு" (பிலி.4:13) என்று இயேசு கிறிஸ்துவை மாத் திரம் நீங்கள் முழுமையாக சார்ந்து கொள்ளுங்கள்! ஜெயம் பெறுவீர்கள்!

விசுவாசியுங்கள்!

தாவீது, அந்த ராட்சதனுக்கு முன்பாக யுத்தத்திற்காக நின்றபோது, "என்னால் முடிந்த அளவு போராடிப் பார்க்கிறேன், வெற்றிபெற்றால் சரி, இல்லையென்றால் சாகிறேன்" என்று சொல்லவில்லை.

தாவீது, அந்த கோலியாத்தைப் பார்த்து: இன்றையதினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார்.... (1 சாமு. 17:46) என்றார். "கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக் கொடுப்பார்!" அதாவது, "கர்த்தர் எனக்கு ஜெயம் கொடுப்பார்!" என்று விசுவாசத்தோடு தாவீது சொன் னார். தாவீதினுடைய அந்த விசுவா சத்தைக் கர்த்தர் கனப்படுத்தி, அவ ருக்கு வெற்றியைக் கொடுத்தார்.

"நான் இந்தத் தேர்வில் வெற்றி பெறு வேன்! கர்த்தர் எனக்கு விசேஷித்த வெற் றியைத் தருவார்! நான் விரும்புகிற கல் லூரியில் மேற்படிப்பு படிப்பேன்" என்று விசுவாசத்தோடு சொல்லுங்கள்.

எனக்கு ஒரு தாயாரைத் தெரியும். அவர்களுடைய மகனுக்கு சிறுவயதி லேயே ஒரு வியாதி இருந்தது, மருத்து வர்கள் கைவிட்டனர். ஆனால் ஜெபித்தபோது ஆண்டவர் கிருபையாய் சுகம் கொடுத்தார். அதனால் மகனை டாக்டருக்குப் படிக்க வைத்து ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று, பல பாடுகள்பட்டு அவனைப் படிக்க வைத்தார்கள். ஆனால் அவனுக்கு மெடிக்கல் சீட் கிடைக்காமல் பொறி யியல் படிக்க சேர்ந்தான். ஆனாலும் தாயார் விசுவாசத்தோடு தொடர்ந்து ஜெபித்தபோது தேவன் அற்புதம் செய்தார்.

திடீரென்று அரசாங்கத்திலிருந்து ஒரு அறிவிப்பு வந்தது. மாணவர்கள் மருத் துவக் கல்லூரியில் சேர்வதைக் குறித்த காரியத்தில் ஒரு திருத்தம் செய்யப்பட்டு, ஒரு புதிய அறிவிப்பு வெளியிட்டார்கள். அதன்படி அவனுக்கு மருத்துவக் கல் லூரியில் சேர அழைப்பு வந்தது. அவன் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படித்து, ஒரு டாக்டராகிவிட்டான்.

இது எப்படி நடந்தது? என்பது ஒரு ஆச்சரியம் தான். கர்த்தர், தன் பிள்ளை களுக்காக அந்த ஆண்டில் ஒரு சட்டத் திருத்தத்தையே கொண்டு வந்தார். நீங்கள் விசுவாசித்தால், உங்களுக்கும், இயேசு அற்புதம் செய்வார். சூழ்நிலை களைப் பார்க்காதபடி இயேசுவின் வல் லமையை மாத்திரம் விசுவாசியுங்கள். விசுவாசத்தோடு ஜெபியுங்கள், அற்புத மாற்றங்கள் உண்டாவதைக் காண்பீர்கள்.

"...நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்" (யோவான் 11:40) என்று இயேசு சொல்லியிருக்கிறார். நீங்கள் எந்தக் காரியத்திற்காக அவரை விசுவாசிக்கிறீர்களோ அந்தக் காரியத்தில், உங்களை அற்புதங் களைக் காணச் செய்வார். உங்கள் வெற்றிக்காக, உங்கள் வேலைக்காக, தொழிலுக்காக அவரை விசுவாசியுங் கள், நீங்கள் ஜெயம் பெறுவீர்கள்! ●

நான் இந்தத் தேர்வில் வெற்றி பெறுவேன்! கர்த்தர் எனக்கு விசேஷித்த வெற்றியைத் தருவார்!

தேர்வு எழுதும் மாணவர்களுக்கான கூடுகை

நாலுமாவடி

Achievers

Achivers கூடுகை நாலுமாவடி தேவனுடைய கூடாரத்தில் ஜனவரி 27ஆம் தேதி நடத்த தேவன் கிருபை செய்தார். இதில் சுமார் 4500 பள்ளி, கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். தேர்வு பயம் நீங்கி, நம்பிக்கையுடன் கடந்து சென்றனர். சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள் மாணவர் களுக்காக ஜெபித்து அனுப்பி னார்கள். டாக்டர் அன்புராஜன் அவர்கள் தேர்வுக்கு முன் எப்படி ஆயத்தமாக வேண்டுமென்ற ஆலோசனை கொடுத்தார்கள்.

கலிலேயாக் கடல்

கலிலேயாக் கடல், வேதத்தில் புதிய ஏற்பாட்டில் கெனேசரேத்து கடல் திபேரியாக் கடல் என்றும் பழைய ஏற்பாட்டில் கின்னரேத் கடல் என்றும் அழைக்கப்படுகிறது. இத்தகைய பெரும் நீர்தேக்கம் இஸ்ரவேல் நாட்டில் உள்ளது. மனித இதயம் போன்ற வடிவம் கொண்ட இந்த ஏரிப்பகுதியில் தான் இயேசு கிறிஸ்துவின் பணி பெரும்பாலும் நிகழ்ந்தது.

அளவுகள்

கெனேசரேத்து கடல் இஸ்ரவேல் நாட்டில் நல்ல தண்ணீர் கொண்ட ஏரிகளுள் மிகப் பெரியதாகும். இதன் சுற்றளவு 53 கிலோ மீட்டர் (83 மைல்); நீளம் சுமார் 21 கி.மீ (13 மைல்); இதன் பரப்பளவு 166 சதுர கி.மீ (64 சதுர மைல்). ஏரியின் மிக அதிக ஆழம் 43 மீட்டர் (141 அடி) கடல்மட்டத்திலிருந்து 214 மீட்டர் (702 அடி) தாழ்ந்துள்ள இந்த ஏரி உலகிலேயே நல்ல தண்ணீர் நீர்த்தேக்கங்களுள் மிகவும் தாழ்ந்த மட்டத்திலும், உப்புநீர் கொண்ட சாக்கடலுக்கு அடுத்தபடியாக உலக ஏரிகளுள் தாழ்ந்த மட்டத்திலுள்ள ஏரிகளுள் இரண்டாவதாகவும் உள்ளது. நீரடி ஊற்றுகளிலிருந்தும் யோர்தான் ஆற்றிலிருந்தும் இந்த ஏரிக்குத் தண்ணீர் கிடைக்கிறது.

இயற்கை சூழல்

அழகிய நீல நிறத்துடன் தோன்றும் இந்த ஏரியில் கரையில் பல பழவகை மரங்களும், வண்ண மலர்செடிகளும் அமைந்து இதற்கு அழகூட்டுகின்றன. இதன் கரையில் சிறுமலைகள் இருக்கின்றன. இப்பகுதி மிகவும் செழிப்பான இடம். கண்ணைப் பறிக்கும் வண்ண மலர்களும், பசுமையான செடி கொடிகளும் பார்ப்பவர்களுக்குப் பரவசமூட்டுகின்றன. மிதமான வெப்பமுடைய நீர் இந்த ஏரியிலுள்ளதும் இதற்கு காரணம். அமைதியே உருவான அழகிய கடல் இது. ஆனால் எர்மோன் மலையிலிருந்து வரும் குளிர்காற்று, திடீரென இதன் அலைகளைப் படைகளாகத் திரட்டி, பேரொலிகளையும், பேரலைகளையும் எழுப்பிப் புயலாக மாற்றிவிடுகிறது.

கலிலேயா கடலில் நிகழ்ந்த அதிசயங்கள்

- இயேசு கலிலேயா கடல் மீது நடந்தார் (மத்.14:26-33; மாற். 4:45-52; யோவான் 16:21)
- கலிலேயா கடலில் ஏற்பட்ட புயலை இயேசு தம் வார்த்தையினால் அடக்கினார் (மத்.8:23-27; மாற்.4:35-41; லூக்.8:22-25)
- கலிலேயா கடலருகில் பாலைநிலத்தில் இயேசு ஐயாயிரம் பேருக்கு அதிசயமான விதத்தில் உணவளித்தார் (மத்.14:13-21; மாற்.6:30-44; லூக் 9:10-17; யோவான் 6:1-14)
- கலிலேயா கடலருகில் இயேசு சீஷர்களுக்கு தம்மை வெளிப்படுத்தினார் (யோவான் 21:1)
- இயேசுவின் சொற்கேட்டு, வலை கிழியத்தக்க திரளான மீன்களைப் பிடித்தார்கள் (லூக்.5:1).





வேதாகம ஹீரோ
ரெபேக்கா

சாராள்

தேவனால் பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக வேதத்தில் எழுதப்பட்டுள்ள ஒரே பெண் இவர்தான். தேவன் வாக்குறுதி அளித்த குழந்தைக்காக வாஞ்சையுடன் பல ஆண்டுகள் காத்திருந்து, விசுவாசத்தில் சற்று தடுமாறிய போதும் இறுதியில் விசுவாசத்தில் உறுதிப்பட்டவர். சோர்ந்து போனாலும் மீண்டும் தேவனுடைய வாக்குறுதியை உறுதியாகப் பற்றிக் கொள்வதற்கு சாராள் ஒரு எடுத்துக்காட்டு!

நற்பண்புகள்

தனது கணவரிடம் மிகுந்த மரியாதை யுடன் நடந்து கொண்டார் (1 பேதுரு 3:6)

ஒரு கேள்விகூட கேட்காமல் ஆபிரகாமை பின்பற்றின சிறந்த பெண்.

விசுவாச மாவீரர் பட்டியலில் இடம்பிடித்த முதல் பெண் இவர் (எபி.11:11)

பெலவீனம்

தேவனுடைய வாக்குறுதியை விசுவாசிப்பதில் தடுமாற்றம்

வாக்குறுதிக்காக காத்திராமல் சுயமாய் முடிவெடுத்து இஸ்மவேல் பிறப்பதற்கு காரணமாயிருந்தது.

தனது தவறை மறைக்க மூன்று முறை குறை கூறியது.

ஆகாரை நல்வழிப்படுத்த முயற்சிக்காமல் துரத்திவிட்டது.

வாழ்ந்த இடங்கள்

கல்தேயாவின் ஊர் நகரம், ஆரான், கானான், எகிப்து.

குடும்பம்

கணவர்: ஆபிரகாம், பிள்ளைகள்: ஈசாக்கு

கற்றுக்கொள்ளும் பாடம்

விசுவாசம், அன்பு மற்றும் பொறுமையாய் சாராள் காணப்பட்டாள். ஆகையால்தான் இந்நாள் வரை "விசுவாசிகளின் தாய்" என்று அனைவராலும் அழைக்கப்படுகிறாா். நாமும் சாராளைப் போல நற்பண்புகள் நிறைந்தவர்களாய் விசுவாசத்தில் உறுதியாய் நிற்போம்!!

கவிதை
ரவி

இயேசு என் இரட்சகர்!

அகிலம் படைத்தவரே
பொன் மகுடம் தரித்தவரே
மகிமையின் ராஜா, சாரோனின் ரோஜா;
மண்ணில் இறங்கினாரே.

நெறி தப்பி வாழ்ந்தவனாம்
தேவ பயமில்லா மானிடனாம்
என் பழியேற்றுத் தன்னுயிர் கொடுக்கச்
சிலுவைக்குச் சென்றாரே.

என் பாவம் சுமந்தவரே
அவமானம் சகித்தவரே
இதிலும் பேரன்பு; வேறில்லையென்று;
நிரூபித்துக் காண்பித்தீரே.

எனக்காய் மரித்தவரே!
மீண்டும் எனக்காய் உயிர்த்தவரே
இன்றும் என்றும் என்பால்;
தேவப் பரிந்துரை செய்பவரே.

தாகம் தணித்தவரே
என் சோகம் கரைத்தவரே
மாசில்லா மணியே; மங்கா ஒளியே;
மங்களம் அருளினீரே.

தாழ்வில் நினைத்தவரே
என் வாழ்வில் ஜொலிப்பவரே
ஆலயம் தேடா ஆண்டவர்;
என்னை ஆலயம் ஆக்கினாரே.

மதிமயக்கம் தெளிவித்தீரே
சன்மார்க்கம் அறிவித்தீரே
பழையவை ஒழிந்தன;
புதியவை பிறந்தன;
உயர் நோக்கம் வெளிப்பட்டதே.

நிம்மதி தேடுவோரே
நித்தம் வாடுவோரே
இயேசுவின் நாமம்; சொன்னாலே போதும்,
நிச்சயம் இரட்சிப்பாரே.

வருகைக்குக் காத்திருப்போர்
விண் வாழ்க்கையைப் பார்த்திருப்போர்
நித்தியம் சேர்த்திட; நியாயத்தின் அதிபதி,
சீக்கிரம் வருவாரே.

பயப்படாதே!

வாழ்க்கையில் பல காரியங்களை சாதிக்கனும்... பெரிய ஆளாகனும்... தேவனுக்காய் எழும்பிப் பிரகாசிக்கனும் என்று பல கனவுகளோடும், ஆசைகளோடும் வாழ்க்கையைத் துவங்கிய நம்மால், நினைத்ததை சாதிக்க முடிந்ததா? சாதிக்காவிட்டாலும் பரவாயில்லை; முயற்சியாவது எடுத்தோமா என்றால் 'இல்லை' என்பதே பலருடைய பதிலாக இருக்கும். ஏன் நினைத்ததை நம்மால் தைரியமாக செய்ய முடியவில்லை? எது நம்மைத் தடுக்கிறது? சற்று யோசித்துப் பார்த்தால் இதற்கான பதில் 'பயமாக' தான் இருக்கும். வாழ்க்கையின் அடுத்த உயரத்திற்கு நாம் செல்லமுடியாமல், நம்மைத் தடுப்பது – பயம் என்னும் மோசமான உணர்வு.

தேவன் நமக்கு பயமுள்ள ஆவியை கொடாமல் பலமும், அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் (2 தீமோ.1:7) என்று வேதம் கூறுகிறது. தேவன் நம் வாழ்க்கைக்காக பல அழகான உயர்வுகளை ஆயத்தம் செய்து வைத்திருக்கிறார். நீங்கள் எதிர்பார்த்த அந்த அழகான வாழ்க்கையை நீங்கள் அடைய வேண்டுமானால், உங்கள் பயத்தைத் தூக்கி எறியுங்கள். நாளைக்கு என்ன ஆகுமோ? எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறதோ? இப்படி உங்களுக்குள்ளேயே பயந்து, பயந்து வாழாமல், தேவன் உங்களுக்கு பெலனுள்ள ஆவியை கொடுத்திருக்கிறார் என்று நம்புங்கள்.

பயம் பிசாசு பயன்படுத்தும் மிக வல்லமையான ஆயுதம். விசுவாசத்திற்கு எதிர்மறையாக செயல்படக் கூடியது. பயத்தினால் உங்கள் வாழ்க்கையில் எவ்வளவு வாய்ப்புகளை இழந்தீர்கள் என்பதை யோசித்துப் பாருங்கள்! எவ்வளவு நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க தவறியிருப்பீர்கள் என்பதை நினைத்துப் பாருங்கள். போன வாய்ப்புகள் மறுபடியும் வராது! இப்படி வாழ்நாள் முழுவதும் பயந்து கொண்டே இருந்தால், நம்மால் எதையும் சாதிக்கவும் முடியாது. வாழ்க்கையை சந்தோஷமாக அனுபவிக்கவும் முடியாது! நீங்கள் சொல்றது எல்லாம் எனக்கு புரியுது... ஆனால் எப்படி பயப்படாமல் இருப்பது? எப்படி பயத்தை மேற்கொள்வது? என்று கேட்பது எனக்குப் புரிகிறது, சொல்கிறேன்...



நாம் சந்தோஷப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், தேவன் நமக்கு பயமுள்ள ஆவியை கொடுக்கவில்லை; நம்மை பயந்தாங்கொள்ளிகளாகவும் பார்ப்பதில்லை; மாறாக அவர் உங்களை பராக்கிரமசாலியாகப் பார்க்கிறார். பயந்த சுபாவம் உடைய 'இந்த நபரை' தேவன் எப்படி பராக்கிரமசாலியாக மாற்றினார், என்பதை இந்த மாதம் பார்க்கலாம்.

மீதியானியர்கள் கிட்டத்தட்ட நாடோடிகளைப்போல நுழைந்தார்கள். ஏழு ஆண்டுகள் இஸ்ரவேலர்களை ஒடுக்கினார்கள். வெட்டுக்கிளிகளை போல் உணவை பட்சித்தார்கள். இஸ்ரவேலர்கள் உணவின்றி கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த காலம் அது. இப்படிப்பட்ட நேரத்தில் தான் கிதியோன் திராட்சை ஆலையில், யாருக்கும் தெரியாமல் உணவிற்காக போரடித்துக் கொண்டிருந்தார் (நியா.6).

பயந்து, ஒளிந்து, மறைந்து வேலை செய்துகொண்டிருந்த கிதியோனைப் பார்த்து, 'பராக்கிரமசாலி' என்று தேவதூதன் அழைத்தார். ஆனால் அப்படி தேவதூதனை அழைத்த பிறகும் கிதியோனின் சிந்தை முழுவதும் பயத்தினாலும், சந்தேகத்தினாலும் நிரம்பி

இருந்ததால், அவருடைய பதில் வித்தியாசமாக இருந்தது. எப்படி அந்த பயத்தை கிதியோன் வெளிப்படுத்தினார்?

கோபம்

தேவன் உன்னோடு இருக்கிறார்! நீ பராக்கிரமசாலி என்றவுடன் தேவனுக்கு நன்றி செலுத்தாமல், கோபத்தோடு, "தேவன் எங்களோடு இருந்தால், நாங்கள் ஏன் இப்படி கஷ்டப்படுகிறோம்?" என்று தேவதூதரிடமே கோபப்பட்டார். பயத்தின் ஒருவித வெளிப்பாடு கோபமாகும். பிசாசும் இந்த கோபத்தைப் பயன்படுத்தி நம் நோக்கத்தில் இருந்து நம்மை வழிவிலக செய்கிறான்.



தாழ்வு மனப்பான்மை

"இருக்கின்ற பெலத்தோடு போ" என்று தேவன் சொன்னபிறகும், கிதியோனால் அதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை; பாதுகாப்பின்மையை உணர்ந்ததால், என் கோத்திரம் எளியது; என் குடும்பத்தில் நான் சிறியவன் என்றெல்லாம் சுயபரிதாபத்தோடும் தாழ்வு மனப்பான்மையோடும் பதிலளித்தார். பயம் இருந்தால் தேவன் உங்கள் வாழ்க்கைக்கு வைத்திருக்கும் திட்டத்தை உங்களால் அனுபவிக்க முடியாது. (நியா.6:14,15)

சந்தேகம்

இவ்வளவு பொறுமையாக தேவதூதர் கிதியோனை உற்சாகப்படுத்தின பிறகும் கிதியோனின் சந்தேகம் தூதரிடம் அடையாளத்தைக் கேட்க வைத்தது. நிகழ்காலத்தை அனுபவிக்காமல், எதிர்காலத்தைப் பற்றிய சந்தேகத்தையும், குழப்பத்தையும் கொடுப்பது இந்த பயத்தின் செயல்பாடே! உங்கள் விசுவாசத்தை முழுமையாக முடக்கிவிடும்... (நியா.6:17,18)

எனவே தேவனுடைய வார்த்தையில் நாம் வாசிப்பதை போல், பயப்படாதீர்கள் 365 நாட்களும் நீங்கள் பயப்படாமல், தேவனை விசுவாசித்து வாழ வேண்டும் என்பதற்காக, வேதத்தில் எழுதி வைத்திருக்கிறார். சரி, பயப்படாமல் தேவனுடைய விடுதலையை நீங்கள் அனுபவிக்க சில ஆலோசனைகள்..

பயத்தை கண்டறியும் (SPOT) போது நீங்கள் செய்ய வேண்டியது: SPOT என்னும் ஆங்கில வார்த்தையில் இருந்தே சொல்கிறேன்.

S - STAND – தைரியம்

பயம், கோபம், தாழ்வுமனப்பான்மை, சந்தேகம், குழப்பம், பிரச்சனை உங்களைத் தாக்கும்போது, தைரியமாக நில்லுங்கள். ஓடி ஒளியாதீர்கள், குழம்பி மறைந்து அழாதீர்கள். நேருக்கு நேர் நில்லுங்கள். சேனைகளின் கர்த்தர் உங்களோடு இருக்கிறார் அவர் பார்த்துக் கொள்வார். (யாத்.14:13,14)

P - PRAY - ஜெபம்

பிரச்சனையை அடையாளம் கண்டுகொண்டு அதனை ஜெபக்குறிப்பாக மாற்றுங்கள். அற்புதத்தை செய்யப் போவதற்காக, விடுதலை தரப்போவதற்காக நன்றி சொல்லி ஜெபியுங்கள். (பிலி.4:6,7)

O - OBJECT TO LIES - பொய்

பிசாசின் பொய்களை ஏற்காமல், அவைகளுக்கு எதிர்த்து நில்லுங்கள். உங்கள் சிந்தனைகளை கிறிஸ்துவுக்குள் சிறைப்படுத்துங்கள். (2 கொரி.10:5)

T - TRUST IN GOD - நம்பிக்கை

பயம் உங்களை அணுகும்போது, எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தர் மேல் நம்பிக்கையாய் இருங்கள். அவர் உங்களைக் கைவிடமாட்டார். (சங்.56:3,4)

எல்லாவற்றிற்கும் பயந்த சுபாவம் கொண்டிருந்த கிதியோனை எடுத்து (பாகால்) விக்கிரகங்களை தகர்க்க பயன்படுத்தினார். இஸ்ரவேலர்களை மீட்டெடுத்தார். 40 ஆண்டுகள் இஸ்ரவேலின் நியாயாதிபதியாக உயர்த்தினார். கிதியோன் தன்னை அர்ப்பணித்து, தேவனுக்குக் கீழ்ப்படிந்து, பயத்தை முழுமையுமாக அகற்றியபோது, அவரால் தேவனுடைய திட்டத்தை செயல்படுத்த முடிந்தது. உங்களாலும் முடியும்...! தேவையற்ற பயங்களை அகற்றி விடுங்கள்! தேவன் ஒருவருக்கே பயப்படுங்கள்! உங்கள் எதிர்காலம் அவருடைய கரங்களில்!! பயப்படாதீர்கள். பாவத்திற்கும், பயத்திற்கும் விலகி ஓடுங்கள்!! ●

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல்கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் சினெர்ஜியா கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!!

நீங்களும் உங்கள் நண்பர்களோடு பங்குபெறுங்கள்!

Together we grow in the likeness of Christ!

SINGING | WORSHIP | SHARING | MESSAGE
PRAYER ACTIVITIES | FELLOWSHIP | TESTIMONIES

நான் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தேன். ஆனாலும் இரட்சிப்பு மற்றும் ஜெப வாழ்க்கையில் பின்தங்கிய நிலையில் தான் இருந்தேன். கல்லூரி 2ஆம் ஆண்டு படிக்கும் இரட்சிக்கப்பட்டேன். சுரண்டையில் சினெர்ஜியா மூலம் அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டதோடு, ஜெபிக்கவும், ஆண்டவருக்காக ஊழியம் செய்யவும், நடைமுறை வாழ்க்கையில் தன்னம்பிக்கையோடு வாழவும் கற்றுக்கொண்டேன்.

நான் எனது பள்ளியிலோ, கல்லூரியிலே எந்தப் பாடத்திலும் தோல்வி அடைந்ததே இல்லை. ஆனால் M.Sc., 2வது செமஸ்டரில் எதிர்பாராதவிதமாக 2 பாடங்களில் தோல்வி அடைந்தது வேதனையாகவும், வெட்கமாகவும் இருந்தது. சினெர்ஜியாவில் கலந்துகொண்டு விசுவாசத்தோடு ஜெபித்தேன். தோல்வி அடைந்த அந்த இரண்டு பாடங்களையும், 3வது செமஸ்டரின் 6 பாடங்களையும் ஆக மொத்தம் எட்டுப் பாடங்களிலும் ஆண்டவர் இயேசு அற்புதமாக வெற்றி பெற செய்தார்.

இப்போது நான் சினெர்ஜியாவில் தன்னார்வ ஊழியராக இணைந்து என்னால் இயன்ற சிறுசிறு ஊழியங்களை ஆண்டவருக்காக செய்து வருகிறேன். இந்த சினெர்ஜியா என் திறமைகளை வெளிப்படுத்தும் இடமாகவும், தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள ஏற்ற இடமாகவும் திகழ்கிறது!

1st SUNDAY (3rd Mar.)

VELLORE (3 PM): Immanuvel Complex, Viruthampet, Near Ambedkar Statue, Vellore. 9442885315

JEBAMALAI (2 PM) Kadaiyam (via), Keelamathapuram, (Tirunelveli Dist). 8300131000 | 9750955548

TIRUPUR (4PM - 6:30 PM) Jesus Redeems Branch Office, No:62 2nd Floor, Benny Kumar Main Road, Tirupur -01. 9750955549

BENGALURU (4PM - 6PM) Steve's Gym, HBR. Layout 3rd Block, (Near Jesus Calls). 9791444788

KULAMANICKAM (10:30AM - 12 PM) Jesus the Way AG Church, Adaikkalapuram, Ariyalur Dt. 9750955548 | 9442855315

SIVAKASI (3PM - 5:30 PM) Jesus Redeems Gethsemane Prayer House, HOREB Complex, 1st Floor, No 1292B PKN Road (Rathna Vilas Stop). 9750955548, 9442906567, 9442842315.

TIRUPATI (3PM) : Old Community Hall, West Church. 9985033401 | 9442885315

2nd SATURDAY (9th Mar.)

MADURAI (4:30 - 6:30PM) Thomas Tution centre Hall Opp. to Reliance Petrol Bulk, Pasumalai. 7598155502 | 975095548

2nd SUNDAY (10th Mar.)

AMBUR (3PM - 6PM) Concordia Hr.Sec.School, Opp Rly. Station, 9597927799 / 9442885315

SATHANKULAM (3.00 PM) Carmel Stores 2nd Floor Opp Bus Stand, 9750955548 | 9442842315

MARTHANDAM (4.30 PM), H.M.S.Century Hall, Behind C.S.I. Church, (opp. P.P.K. Hospital) 9865189883

THANJAVUR (3:00PM)
Jesus Redeems Gethsemane Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, M.C.Road. 9444381971 | 9750955548

USILAMPATTI (3:00PM)
Arputha Jeba Maiyam, Opp TELC School 7598155502.

MUMBAI (5PM - 7:30PM)
Bright High School, Village Road, Bhandup(W), Mumbai - 400078 (Near Nahur Rly. station), 9004882470 | 8082410410

PAVOORCHATRAM (2:30 PM)
KTC Nagar CSI Christ Church 9750955548, 9994436722, 9842166406

POLLACHI (3:30 PM - 6 PM)
Balamurugan A/C Mahal, Coimbatore Road, Near Amuthasurabi Hotel. 9750955549

KOVILPATTI (3PM - 5.30PM)
St. Paul's Matriculation School, Kovilpatti 9750955548 | 9787322334

VILLUPURAM (3 - 6PM)
SAP Mahal 1st Floor, Opp. Petrol Bunk, Old Bus Stand 8344411022 | 9442885315

3rd SUNDAY (17th Mar.)

TIRUNELVELI (3:30 PM)
The Deaf & Dumb School, (opp- Central Jail) Palayamkottai. 9750955548 | 9488212915

CHENNAI (3.30PM)
VGP Victory House, Mount Rd. 9442 885315

COIMBATORE (4PM)
Jesus Redeems Branch Office Gethsamane Prayer Center, No:90,1st, Floor Arts College Rd., Near Charan Tower, Coimbatore 0422 - 2309040 | 9750955549

TRICHY (3PM)
22A, Ist Floor, Thennur High Rd., Near KMC Bus Stop, Thennur, Trichy - 620017. 9442855315

NALUMAVADI (2.30PM)
Tabernacle of God, Nalumavadi, Thoothukudi Dt 9750955548 | 04639 - 220022

NAGERCOIL (4 PM)
Jehova Salvation Church, 369C, Derik Junction. 9865189883 | 7598155503

CUDDALORE (3PM - 6PM)
Jesus Redeems Branch Office, Chellakuppam (Old Town) 9965144000 | 9442885315

MUMBAI (5PM - 8PM)
Bethel, MithChowky Lane Near Girdhar Park, Marve Road, Malad -W. 9004882470 |9664050567

DINDIGUL (3PM - 5:30 PM)
Jesus Redeems Gethsemane Prayer Center, No.37H/69, Scheme Road, Nagal Nagar. 7598155502 | 9750955548

4th SUNDAY (24th Mar.)

TUTICORIN (3PM - 5.30PM)
Suganthi Nursing Home Prayer Hall, Near Jesus Redeems Branch Office, 77 V.E Road, Opp to Holy Convent 9750955548| 8344116000| 9442842315

PONDICHERRY (3PM - 6PM)
Hallelujah A.G. Church, Thennan Salai Road, 8344433800 | 9787339422

THIRUVALLUR (2.30PM - 5 PM)
Jesus Redeems Branch Office HSR Tower (Near Gowdi Church) Theradi, Thiruvallur. 9442885315

MUMBAI (5PM - 7.30PM)
Dharavi 09004882470 | 8082410410

ERODE (4 PM - 6:30 PM)
Jesus Redeems Branch Office, No:216, KR Bakery, Ist Floor Near Fire Service, Gandhiji Road. 9750955549

SURANDAI (2.30PM)
Jawarhalal Middle School, Surandai. 9443962141 | 9750955548 9442842315

OOTY (2PM - 5PM)
YWCA Chapel, Anandagiri. 9750955549

TIRUVANNAMALAI (4PM- 6PM)
Leebanon Bungalow, Vettavalam Rd., Bypass Road Corner 9865553420 | 9789004627

THENI (2.30PM - 5 PM):
Jesus Redeems Branch Office, No.203, Madurai Road, (opp Anantham Silk) Dr. Kamaraj Hospital, 1st Floor, 7598155502 | 9976766422

PERNAMBUT (3 PM - 6 PM):
Revival Prayer Tower, V. Kotta Road, Pernambut, Vellore Dist. 99408 54125

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி
SathiyamTV
சத்தியம்
சனிக்கிழமை
(10:30 PM)

வாலிபர்களே!
உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்!
இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!
9750955547

ஜெபம் பெனிட்டா

ஜெபக் கையேடு மார்ச் 2019

புற்றுநோய்

உலக அளவில் ஒவ்வொரு வருடமும் புற்று நோயால் 14 வயதுக்குட்பட்ட 80,000 சிறார்கள் மரித்துக் கொண்டிருக்கிறார்கள். சிறுபிள்ளைகள் எந்தவித மான வியாதினாலும் தாக்கப்படாமல் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

உலகில் ஏதோ ஒருவகையான புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் 4 கோடியே 20 லட்சம் மக்கள் சுகம்பெற ஜெபிப்போம்.

2018ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 96 லட்சம் பேர் புற்றுநோயால் மரித்துள்ளார்கள். புற்றுநோய் யாரையும் தாக்காதபடிக்கும், பாதிக்கப்பட்டவர் கள் சுகம்பெறவும் போராடி ஜெபிப்போம்.

இந்தியாவில் 4,13,519 ஆண்களும், 3,71,332 பெண்களும் 2018ஆம் ஆண்டில் மட்டும் மரண மடைந்துள்ளதாக ஆய்வு கூறுகிறது. இவை முற்றிலும் அழிக்கப்பட ஜெபிப்போம்.

புற்றுநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களுக்கு தேவஞானமும், நேர்மையும், மனதுருக்கமும் உண்டாக ஜெபிப்போம்.

ஒவ்வொரு 8 நிமிடங்களில் 1 பெண் கர்ப்பவாய் புற்றுநோயினால் மரிக்கிறார்கள். 2 பெண்களில் ஒருவர் மார்பக புற்றுநோயினால் மரிக்கிறார்கள். பெண்க ளுக்கு ஏற்படும் இவ்வகையான புற்றுநோய் கிருமிகள் அழிக்கப்பட ஜெபிப்போம்.

அதிகவேமாக மரணம் சம்பவிக்கும் இரண்டாவது நோய் புற்றுநோய் என்று ஆய்வு கூறுகிறது. இந்த கிருமி நம் தேசத்தை விட்டு அடியோடு ஒழிக்கப்பட கருத்தாய் ஜெபிப்போம்.

மனஅழுத்தம்

அமெரிக்கர்களைவிட இந்தியர்கள் அதிகளவு மன அழுத்தத்திற்கு ஆளாகியுள்ளதாக ஆய்வு சொல்கிறது. மன அழுத்தத்திற்குள்ளாகியிருக்கும் ஒவ்வொருவரும் சுக மடைய ஜெபிப்போம்.

18 வயது முதல் 34 வயதுக்குட்பட்டவர்கள் மற்ற வயதினரைக் காட்டிலும் வேலை மற்றும் நிதி பிரச் சனைகளால் மனஅழுத்தத்திற்கு உள்ளாவதாக ஆய்வு கூறு கிறது. வாலிபர்களின் மனஅழுத்தம் மாறி வாழ்க்கையில் சாதிப்பவர்களாக மாற ஜெபிப்போம்.

இந்தியாவில் 5 கோடி பேர் மனஅழுத்தத்திற்குள்ளாகி இருப்பதாக புள்ளிவிவர அறிக்கை கூறுகிறது. 5 கோடி பேரின் மனநிலையில் சந்தோஷம் உண்டாக ஜெபிப்போம்.

இந்தியாவில் தற்கொலை செய்து கொள்பவர்களில் 50%க்கும் அதிகமானோர் மனஅழுத்தத்தினால் செய்கிறார்கள் என்கிறது ஆய்வு. தற்கொலையைத் தூண்டும் ஆவிகளை கடிந்து ஜெபிப்போம்.

10 ஆண்டுகளில் மனநோயாளிகள் 18% அதிகரித் துள்ளதாக WHO தெரிவித்துள்ள ஆய்வறிக்கை. இந்த சதவீதம் குறைய ஜெபிப்போம்.

இந்தியாவில் 4 லட்சம் பேருக்கு ஒரு மனநல மருத் துவர் இருப்பதாக புள்ளிவிரம் கூறுகிறது. சுமார் 4000 மனநல மருத்துவர்களும், 1000 மனநல ஆலோசகர் களும் இருக்கிறார்கள். இன்னும் மருத்துவர்களும், ஆலோச கர்களும் கிடைக்கப்பெற ஜெபிப்போம்.

மத்திய மாநில அரசாங்கம் இதை கவனத்தில் கொண்டு முறையான சிகிச்சை அளிக்க மனநோய் மையங்களில் மருத்துவர் மற்றும் ஆலோசகர் நியமிக்க ஜெபிப்போம்.

தினமும் ஒரு நிமிடம் எடுத்து அன்றைய தேதியில் கொடுக்கப்பட்டுள்ள ஜெபக் குறிப்புக்காக முழுமனதோடு ஜெபியுங்கள்.

உங்கள் ஜெபக்குழுவில் நீங்கள் ஜெபித்து, பதில் கிடைத்த சாட்சிகள் இருந்தால் எங்களுக்கு எழுதுங்கள். தினமும் ஒரு நிமிடம் தேசத்திற்காய் திறப்பிலே நிற்போம்...

வேலைவாய்ப்பு

தமிழகத்தில் கடந்த ஏப்ரல் கணக்கெடுப்பின்படி வேலை வாய்ப்பிற்காக பதிவு செய்து காத்திருக்கும் 79 லட்சத்து 62 ஆயிரத்து 826 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட ஜெபிப்போம்.

படிப்பை முடித்த இளைஞர்கள் 28.85 லட்சம் பேர் அரசு வேலைக்காக பதிவு செய்து காத்திருக்கும் இளைஞர்களுக்கு தகுந்த வேலைகள் கிடைக்க பெற ஜெபிப்போம்.

அரசு வேலைக்காக காத்திருக்கும் 24 லட்சம் பொறியியல் பட்டதாரிகளுக்கு அரசாங்கம் தகுதி அடிப்படையில் வேலைகள் கொடுக்க ஜெபிப்போம்.

மாற்றுத் திறனாளிகள் 98,709 பேர் பதிவு செய்து காத்திருக்கிறார்கள். இவர்களுக்கும் அரசாங்கம் பணிநியமனம் செய்து வாழ்வாதாரத்தைப் பெருக்க ஜெபிப்போம்.

அரசாங்கத்தில் அநேக காலி பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளது. அவற்றை தகுதியுள்ளவர்களுக்கு பணிநியமனம் செய்து கொடுக்க அரசாங்கம் முன்வர ஜெபிப்போம்.

உலக அளவில் 4.47 கோடி பேர் வேலைக்காக காத்திருப்பதாகவும், மாநில வாரியாக தமிழகத்தில் தான் அதிகபட்சமாக 80 லட்சம் பேர் வேலைக்காக காத்திருப்பதாக புள்ளிவிவரம் கூறுகிறது. தமிழகத்தில் வேலை இல்லா திண்டாட்டம் குறைக்கப்பட ஜெபிப்போம்.

வேலை இல்லாமல் தற்கொலை மற்றும் கொலை கொள்ளை போன்ற காரியங்களில் ஈடுபடுகிறார்கள். இவற்றை குறைக்க அரசாங்கம் வேலைவாய்ப்புகளை வழங்கி இளைஞர்களின் வாழ்க்கையில் ஒளி ஏற்றப்பட ஜெபிப்போம்.

விபச்சாரம்

மும்பை, கொல்கத்தா, பெங்களூரைத் தொடர்ந்து தமிழகத்திலும் ஆண்கள் விபச்சாரம் பெருகி வருகிறது. சென்னையில் மட்டும் நாள் ஒன்றுக்கு ஆண் விபச்சாரர்கள் கோடிக்கணக்கான பணம் செலவு செய்கிறார்கள். விபச்சார ஆவியை கட்டி ஜெபிப்போம்.

சென்னையில் வேலை இல்லாமல் இருக்கும் வாலிபர்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி வருவதாக ஆய்வு கூறுகிறது. வாலிபர்கள் இந்த மாய வலையில் சிக்கிக் கொள்ளாதபடி தேவன் பாதுகாத்துக் கொள்ள ஜெபிப்போம்.

ஏழைக் குடும்பத்தை சேர்ந்த வாலிபர்களை குறிவைத்து விபச்சாரத்திற்கு அழைக்கும் நபர்களை தேவன் சந்திக்க ஜெபிப்போம்.

“கிகோலஸ்” என்னும் ஆண் விபச்சாரம் சென்னையில் மட்டும் 1500க்கும் மேல் இருப்பதாக கூறுகிறது. சென்னை பட்டணம் மறுரூபமாக்கப்பட ஜெபிப்போம்.

பாலியல் தொழிலின் தலைமையிடமாக சென்னை நுங்கம்பாக்கம் மாறுகிறது. இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை தங்கள் பாலியல் இச்சைகளுக்காக 1500 முதல் 5000 வரை விலை போகும் விலை மாதர்கள் மனம் திரும்ப ஜெபிப்போம்.

சிறுபிள்ளைகள் அதிகமாக பாலியல் பலாத்காரத்திற்குள்ளாகிறார்கள். சிறுபிள்ளைகளை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யும் கடின இருதயம் படைத்த மனிதர்களின் கடினத்தன்மை மாற ஜெபிப்போம்.

பள்ளிக்கு செல்லும் சிறு பிள்ளைகள், வாலிப பெண்களின் பாதுகாப்பிற்காகவும், பெண்களை பாலியல் தொழிலுக்கு இழுக்கும் இச்சையின் ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.

தேர்தல்

நீதிமன்றங்கள், தேர்தல் கமிஷன் எந்த ஒரு அரசியல் தலைவர்களின் கட்டுப்பாட்டில் இயங்காமல், கட்சி பாகுபாடின்றி நடுநிலையோடு செயல்பட ஜெபிப்போம்.

இந்தியாவில் இருக்கும் சுமார் 90 கோடி வாக்காளர்கள் அனைவரும், கடமை உணர்வோடு சரியான நேரத்தில் வாக்களிக்கவும், கள்ள ஓட்டுகள் போட முயற்சிக்கிற காரியங்கள் முற்றிலும் தடுக்கப்படவும் ஜெபிப்போம்.

தலைமைத் தேர்தல் ஆணையரும், அவரது குழுவினரும் பாரபட்சமற்ற முறையில் விதிகளை நடைமுறைப்படுத்துவதில் கண்டிப்புடன் நடந்துகொள்வதற்கு வேண்டிய மன தைரியத்தை தேவன் அவர்களுக்கு கட்டளையிட ஜெபிப்போம்.

லீனா அவினாஷ்

தேவ வார்த்தைக்கு நடுங்குவது...

பிரியமானவர்களே! நாம் வாழும் சமுதாயம், தேவனையும் அவருடைய வார்த்தையையும் புறக்கணித்ததால்தான் இன்று ஆபத்தான, ஒழுக்கமற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அநேகர் தேவனுடைய யோசனையைவிட அவர்கள் வாழ்க்கைக்கு அவர்களுடைய எண்ணமும், யோசனையுமே சிறந்தது என்று எண்ணி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய போதனைகள் நம்முடைய நன்மைக்காகவே நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனை கடைப்பிடிப்பவர்கள் இதனால் ஆசீர்வதிக்கப்படுவார்கள். ஆனால் எந்த ஒரு சந்ததி தேவனுடைய வார்த்தைகளை புறக்கணிக்க நினைக்கிறதோ அந்த சந்ததி சீர்குலைந்து போய் விடும்.

கிறிஸ்தவர்களாகிய நாம், நம் சமுதாயத்தில் தேவனுடைய வார்த்தையை அறிக்கையிட்டு, கனப்படுத்தி வாழ வேண்டும். அந்த வார்த்தைகளை நம் வாழ்க்கையில் கடைபிடிப்பதே நம்முடைய தலைசிறந்த பொறுப்பு.

நம் பூமி இவ்வளவு மோசமாக சீர் குலைந்து போயிருந்தாலும், தேவன் தன்னுடைய அதிகாரத்தைக் கைவிட வில்லை.

வானம் எனக்கு சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி; என்னுடைய கரம் இவைகளையெல்லாம் சிருஷ்டித்ததினால் இவைகளெல்லாம் உண்டாயின (ஏசாயா 66:1-2) என்று கர்த்தர் சொல்கிறார்.

தேவனுடைய மகிமைக்காகக் கட்டப்பட்ட சாலொமோனின் தேவாலயத்தில் கூட தேவனால் முழுமையாக வாசம் செய்ய முடியவில்லை. நாம் அவருக்காக செய்யும் காரியங்களை (கட்டும் கட்டிடங்களை) விட, தாழ்மையான இருதயத்தோடு அவருடைய வார்த்தைக்கு நடுங்குகிறவர்களையே அவர் நோக்கிப் பார்க்கிறார்.

வரலாறு முழுவதிலும், தேவன் அவருடைய வார்த்தையின் தூய்மையைக் காத்து வந்தார். இன்று நமக்கு பலவிதமான மொழிபெயர்ப்புகள் உள்ளன. ஆனால் எந்த மொழிபெயர்ப்பாக இருந்தாலும், நம் வேதத்தை வாசிக்கும்போது நாம் நடுங்குகிறோமா? சர்வ வல்லமையுள்ள தேவன் எழுதின வார்த்தைகள் இவைகள். அந்த வார்த்தைக்கான கனத்தை, மகிமையைக் கொடுக்கிறோமா?

நாம் வாஞ்சையோடும், தாழ்மையோடும் வேதத்தை வாசித்தோமானால், அவருடைய வார்த்தைக்கான நம்முடைய தேவைகளை நம்மால் அறிந்துகொண்டு, நம் வாழ்க்கையை மாற்றக்கூடிய அவருடைய அதிகாரத்திற்கு நாம் நம்மை அர்ப்பணிக்கத் துவங்குவோம். வேதாகமம் மிகவும் விலையேறப்பெற்ற பொக்கிஷம். ஒவ்வொரு

தேவனுடைய வார்த்தையை அறிக்கையிட்டு, கனப்படுத்தி வாழவேண்டும்.

முறை நாம் இந்த வேதத்தை வாசிக்கும்போதும் அதன்படி நடக்கும்போதும் அதனை எவ்வளவு கனப்படுத்துகிறோம் என்பதை வெளிப்படுத்திக் காண்பிக்கிறோம்.

தேவனுடைய வார்த்தைக்கு நடுங்குகிறவர்களின் குணாதிசயங்கள்

தேவனுடைய வார்த்தையைக் கேட்பார்கள்

தேவனுடைய வார்த்தையை நாம் கனப்படுத்துகிறோம் என்றால் அவருடைய வார்த்தையைக் கேட்க நேரம் கொடுப்போம். சபைக்கு, ஐக்கியங்களுக்கு சென்று, தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதில் வளர முயற்சிப்போம். தேவன் நம்மிடம் பேசுவதை கவனமாகக் கவனித்து, நாம் அதனை மறந்துவிடாத அளவில் அதனை குறித்து வைப்போம். ஆனால் இது ஞாயிற்றுக் கிழமைகளில் மாத்திரம் நடக்கும் செயல் அல்ல. ஒவ்வொரு நாளும் அவருடைய வழிநடத்துதலுக்காகவும், ஆலோசனைக்காகவும் அவருடைய வார்த்தையை நாடுவோம்.

நம்புவதற்கான வாஞ்சை

தேவன் நம்பத்தக்கவராக, உண்மையுள்ளவராக இருப்பதினால், நாம் வேதத்தில் வாசித்த அவருடைய வாக்குத்தத்தங்களை நம்பி, உரிமையாக அவரிடம் கேட்க முடியும். நாம் அவருடைய சித்தத்தின்படி ஜெபிக்கும்போது அவர் நமக்கு பதில் தருவார் என்று நம்பி ஜெபிக்க வேண்டும் (1 யோவான் 5:14,15).

கீழ்ப்படிய வேண்டும் என்ற விருப்பம்

தேவனுடைய வார்த்தையை வாசிப்பதோடு மாத்திரம் நிறுத்தாமல், அவருடைய வார்த்தைக்கு நாம் நடுங்க வேண்டும். நாம் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். இதுதான் நம் ஆவிக்குரிய மன்னா. இதை வாசிக்காவிட்டால், நாம் நம் ஆவியில், சரீரத்தில், சில நேரங்களில் உணர்வுகளில் கூட பெலவீனர்களாகி விடுவோம். ஆனால் நாம் அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு அவருடைய போதனைகளை வாசிக்கும்போது, நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் பெலப்படுத்தப்படுகிறோம். அவருடைய சிந்தையையும், அவருடைய வார்த்தைகளையும் நமக்கு தேவன் கொடுத்திருப்பதால் நம்மிடம் இருந்து அவர் எதை எதிர்பார்க்கிறார் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

> நாம் தேவனுடைய கட்டளைகளை வாசிப்போமானால், நாம் எங்கு செல்ல வேண்டும், என்ன சொல்ல வேண்டும் எப்படிப்பட்ட தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்பதை எல்லாம் அந்த வார்த்தை நமக்குப் போதிக்கும்.

தேவனுடைய வார்த்தையை வாசிப்பதினால் வரும் பயன்கள்

ஜீவனுள்ள தேவன் எனக்கு எழுதிக் கொடுத்த வார்த்தைகள் இவைகள் என்பதை உணர்ந்து, அதன்படி வாழ முயற்சிப்பவர்கள் அல்லது அதன்படி வாழ்பவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்கள்!

நம்மை இரட்சிப்பிற்கு ஏதுவாக நடத்துகிறது

இதை வாசித்துக் கொண்டிருக்கும் நாம், மற்றவர்கள் நமக்கு தேவனைப் பற்றி சொன்னதின் விளைவால் இரட்சிக்கப்பட்டிருந்தாலும், வேதத்தை வாசிப்பதின் மூலமாக தான் நம்மால் இரட்சிப்பிற்கான வழியை அறிந்து கொள்ள முடியும் (யோவான் 3:16; ரோமர் 10:9). நாம் எல்லோரும் சத்தியத்தை அறிகிற தேவனுடைய வார்த்தையினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். நாமாகவே படித்தும் தெரிந்திருக்கலாம், அல்லது மற்றவர்கள் நமக்குக் கற்றுக்கொடுத்த அவருடைய வார்த்தைகளாகவும் இருக்கலாம் (1 பேதுரு 1:23).

நம்மை வழிநடத்துகிறது

சங்கீதம் 119:105ல் உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும் என் பாதத்திற்கு வெளிச்சமுமாய் இருக்கிறது என்று வாசிக்கிறோம். நாம் தேவனுடைய கட்டளைகளை வாசிப்போமானால், நாம் எங்கு செல்ல வேண்டும், என்ன சொல்ல வேண்டும் எப்படிப்பட்ட தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்பதை எல்லாம் அந்த வார்த்தை நமக்குப் போதிக்கும். நாம் தவறான பாதையில் செல்லும்போது வரவிருக்கும் ஆபத்தில் இருந்து இந்த வார்த்தை நம்மை பாதுகாக்கும்.

> **தேவனுடைய வார்த்தையை நாம் நேசிப்போமானால் அவருடைய வார்த்தை மிகுந்த சந்தோஷத்தையும் ஆறுதலையும் கொடுக்கிறது.**

ஞானத்தைக் கொடுக்கிறது

உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும் (சங்கீதம் 11:130). தேவனுடைய வேதமே நம் முடைய மிகப்பெரிய பாதுகாப்பு. நமக்கு முன்பாக அரணாக நம்மைப் பாதுகாக்கிறது. வரவிருக்கும் ஆபத்தி லிருந்து நம்மை எச்சரித்துக் காக் கிறது. ஆனால் இந்த வேதத்தை நாம் வாசிக்கத் தவறிவிட்டால் எது சரி? எது தவறு? என்று கூட நம்மால் கண்டு பிடிக்க முடியாது.

நம் பாரத்தை அது இலகுவாக்குகிறது

தேவன் நம் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் மிகுந்த அக்கறையோடு இருப்பதால், நாம் வலியில் இருக் கும்போது, கவலையில், தனிமையில் அல்லது வியாதியில் இருக்கும்போது அவருடைய வார்த்தையில் பெலப் படுத்தப் படுகிறோம் (சங்கீதம் 119:114).

சந்தோஷத்தைக் கொடுக்கிறது

தேவனுடைய வார்த்தையை நாம் நேசிப்போமானால் அவருடைய வார்த்தை மிகுந்த சந்தோஷத்தையும் ஆறுதலையும் கொடுக்கிறது (சங்கீதம் 119:111). கடினமான சூழ்நிலைகளின் வழியே செல் லும்போதும், சோர்ந்துபோன நேரங்களிலும் முதலாவது வேதத்தை வாசிக்க வேண் டும். எந்தப் பகுதியை வாசிக்க வேண்டும் என்று தெரியாமல் இருந்தாலும், தேவன் நீங்கள் வாசிக்க வேண்டிய அந்தப் பகு தியை உங்களுக்கு வெளிப் படுத்திக் காண்பிப்பார்.

சமாதானத்தைக் கொடுக்கிறது

உலகத்தில் நாம் வாஞ்சிக்கும் பெற்றுக்கொள்ள நினைக்கும் விலை யேறப்பெற்ற காரியம் என்னவென்று பார்த்தால், அது சமாதானம். இந்த சமாதானத்தை நாம் தேவனிடம் இருந்து தான் பெற்றுக்கொள்ள முடி யும். “உம்முடைய வசனத்தை நேசிக் கிறவர்களுக்கு மிகுந்த சமாதானம் உண்டு, அவர்களுக்கு இடறல் இல்லை” (சங்கீதம் 119:165).

தேவனுடைய வசனத்தை நேசித்து, அதற்கு கட்டுப்பட்டிருக்கும் நமக்கு மிகுந்த சமாதானம் உண்டு. இயேசு தம்முடைய சீடர்களிடம் இந்த சமா தானத்தைப் பற்றி தான் சொன்னார் (யோவான் 14:27).

பிரியமானவர்களே, தேவனுடைய விலையேறப்பெற்ற வார்த்தையை வாசிக்கும் நம்மை ஆசீர்வதிக்க தேவன் பிரியமாய் இருக்கிறார். அது மட்டுமல்லாமல், அவருடைய வார்த் தைக்கு நடுங்குகிறவர்களையே அவர் நோக்கிப் பார்க்கிறார் (ஏசாயா 66:2). எனவே வேதத்தை நேசிப்போம்! அவருடைய வார்த்தையை வாசிப்போம்!! ●

பேரீச்சம் பழம்

இரும்புசத்து

ரத்தசோகையை சரிசெய்கிறது. உடலுக்கு தேவையான ஆரோக்கியத்தை தருக்கிறது. ரத்தம் சம்பந்தமான நோய்களை குணப்படுத்துகிறது.

ஊட்டச்சத்து

தினமும் 3 பேரீச்சம் பழம் உட்கொண்டால் ஒரு நாளைக்கு வேண்டிய ஊட்டச்சத்துக் கிடைக்கும்.

இதயத்தை இதமாக்கும்

இதய நோய்களில் இருந்து காத்துக் கொள்ளும். கெட்ட கொழுப்பை குறைக்கும், உயர் இரத்த அழுத்தம் இருப்பவர்கள் தினமும் 3 பேரீச்சம்பழம் சாப்பிடுவதால் ரத்த அழுத்தம் கட்டுக்குள் வரும்.

எலும்பை வலுவாக்கும்

பெண்களுக்கு எலும்புருக்கி நோயை குணப்படுத்தும்

நினைவாற்றலை பெருக்கும்

மூளை சுறுசுறுப்பாக இயங்க உதவுகிறது. ஞாபக மறதி யால் பாதிக்கப்பட்டோருக்கு ஏற்படும் நினைவாற்றல் இழப்பை தடுக்கிறது.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/81-A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

வாலிபர் கொண்டாட்டம்

கல்யாணில்....

ஏப்ரல் 27 (5 - 9 pm)

செய்தி: சகோ. அவினாஷ்

இடம் :
VERNON MEMORIAL METHODIST CHURCH,
Murbad Road,
Opp. State Bank of India,
Kalyan - W, Thane.

9004882470

திருவள்ளூரில்...

ஏப்ரல் 28 (3 - 6 pm)

செய்தி: இயேசு விடுவிக்கிறார் வாலிபர் குழுவினர்

இடம் : இயேசு விடுவிக்கிறார் கெத்செமனே ஜெபமையம்
HSR Tower 2வது மாடி,
CSI வில்லியம் கௌடி
ஆலயம் அருகில்
திருவள்ளூர்

7010586464
9629572307

நாகர்கோயிலில்...

மாணவர் ஆசீர்வாத கூடுகை

மார்ச் 10

ஞாயிற்றுக் கிழமை (4:30 - 8:30 pm)

ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி மைதானம்,
பார்வதிபுரம், நாகர்கோயில்

செய்தியும் ஜெபமும்

சகோ. மோகன் சி. லாசரஸ்

98651 89883
75981 55503

மே, 26
(3 - 6 pm)

சங்கரன்கோவிலில்...

செய்தி: சகோ. சாம் ஜெபராஜ்

இடம் : இயேசு விடுவிக்கிறார் கெத்செமனே ஜெப மையம்
ஷெக்கினா எம்பயர் ஹால்
காங்கிரஸ் பொன்விழா மைதானம்
பின்புறம், முல்லை நகர்

8344949555 / 9442885315



ஜூன் 2
(4 - 8 pm)

திருப்பூரில்...

செய்தி: சகோ. சாம் ஜெபராஜ்

இடம் : இடம் பின்னர் அறிவிக்கப்படும்

9843270925
9442885315
9750955549

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2017-2019.
Date of Publication: 25-02-2019.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2017-2019.

நாலுமாவடி தேவனுடைய கூடாரத்தில்...

2019
ஆகஸ்ட்
16
17
18
3 நாட்கள்

சேனை

வாலிபர் தலைமைத்துவ பயிற்சி முகாம்

வயது வரம்பு : 17-35   பதிவுக் கட்டணம் 200/-

குறிப்பு: இரட்சிப்பின் அனுபவம் இருக்க வேண்டும்.
ஊழியம் செய்ய வாஞ்சையுள்ளவர்கள் மட்டும்!

பயிற்றுவிப்போர்

சகோ. மோகன் சி. லாசரஸ் | சகோ. அப்பாத்துரை | சகோ. சாம் ஜெபராஜ்

இம்முகாமில் பங்குபெற விரும்புவோர் பெயர், வயது, விலாசம், தொலைபேசி எண்,
உங்களுக்கும் தேவனுக்கும் உள்ள உறவு? இரட்சிப்பின் அனுபவம்? ஊழிய அனுபவம்?

மேலே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு நான்கு வரிகளில் பதில் எழுதி **e-mail (youth@jesusredeems.org)** மூலமாகவோ,
கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு கடிதம் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்!

விண்ணப்பப் படிவம் வந்து சேர வேண்டிய கடைசி நாள் **ஜூன் 30, 2019**
இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம், நாலுமாவடி - 628 211, தூத்துக்குடி மாவட்டம்

மேலும் விவரங்களுக்கு: **9750955548/ 9750955549/ 9442885315 / 04639-220022**